TIRUKKURUNKUTI NAMPIRAYAR TIRUKKOYIL KAICIKA NATAKAM

COLUMBIA LIBRARIES OFFSITE
CU25213059

COLUMBIA UNIVERSITY
THE
LIBRARIES
IN THE CITY OF NEW YORK

ஸ்ரீஸுந்தர பரிபூர்ணாய நம:
ஸ்ரீமத் மஹாபூர்ண குரவே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீகுருங்க முநயே நம:

திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில்

கைசிக நாடகம்

ஓலைச்சுவடி நகல்

பதிப்பாசிரியர்
சே. இராமானுஜம்

திருக்குறுங்குடி
நம்பிராயர் திருக்கோவில்
கைசிக நாடகம்

ஓலைச்சுவடி நகல்

OFFSITE
PL
4758
.T57
2014

திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில் கைசிக நாடகம்

ஓலைச்சுவடி நகல்

கைசிக புராணம், வராக புராணத்தில் காணப்படுவது. இராமானுஜரின் சீடரான பராசரப் பட்டரின் விளக்கத்துடன் இப் புராணம் கார்த்திகை மாதம் வளர்பிறை ஏகாதசியன்று வைணவக் கோவில்களில் படனம் செய்யப்படுகிறது. எனவே பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து நம்பாடுவான் என்ற திருக்குலத்தான் சோம சர்மா என்ற பிராமணனுக்குப் பிரம்ம ராட்சத வடிவிலிருந்து கைசிகப் பண்ணில் இறைவனைப் பாடிய பலனால் மோட்சம் கொடுத்த தொன்மத்தின் படனம் இது.

யாகம், தவம், யோகம் போன்ற வழிமுறைகளிலிருந்து மாறி கானத்தால் பேறுபெறும் எளிய மார்க்கத்தைக் காட்டுவது இத் தொன்மம். திருக்குறுங்குடி கோவிலில் மட்டும் மேற்படி நாளில் நாதஸ்வரக் கலைஞரை நட்டுவனராகக் கொண்டு தேவதாசி களால் நாடகமாகப் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்தே நடத்தப் பட்டு வருவதாகத் தெரிகிறது. பராசரப் பட்டரின் வியாக்கியானத்தை வெல்பன் என்னும் அமெரிக்க ஆய்வாளர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில் **கைசிக நாடகம்** – ஓலைச்சுவடி நகல் • மரபுக்கூத்துப் பனுவல் • பதிப்பாசிரியர்: சே. இராமானுஜம் • © அரங்கம் அறக்கட்டளை • முதல் பதிப்பு: மார்ச் 2014 • இணைந்து வெளியிடுவோர்: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669 கே.பி. சாலை, நாகர்கோவில் 629001 மற்றும் அரங்கம் அறக்கட்டளை, 10, செனடோப் இரண்டாவது சந்து, சென்னை 600018 • முன்னட்டை: திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில் சுதை சிற்பம்.

காலச்சுவடு பதிப்பக வெளியீடு: 570

Thirukkurunkudi Nambirayar Thirukovil **Kaisika Natakam** - Palm Leaf Script • Traditional Theatre Text • Editor: S. Ramanujam • © Arangam Trust • Language: Tamil • First Edition: March 2014 • Size: Demi 1 x 8 • Paper: 18.6 kg maplitho • Pages: 88

Jointly Published by Kalachuvadu Publications Pvt. Ltd., 669 K.P. Road, Nagercoil 629001, India. Phone: 91-4652-278525, e-mail: publications @kalachuvadu.com and Arangam Trust, 10, Cenotaph Second Lane, Chennai 600018 • Front Cover: Thirukkurunkudi Nambirayar Thirukovil Lime and Sand Sculpture Wrapper Printed at Print Specialities, Chennai 600014 • Printed at Mani Offset, Chennai 600005

ISBN: 978-93-82033-37-0

03/2014/S.No.570, kcp 1052, 18.6 (1) ILL

ஸ்ரீஸுந்தர பரிபூர்ணாய நம:
ஸ்ரீமத் மஹாபூர்ண குரவே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீகுருங்க முநயே நம:

ஸ்ரீ நம்பிராயப் பெருமாள்
திருக்குறுங்குடி

பொருளடக்கம்

1. *ஆசியுரை*
   – திருக்குறுங்குடி
   ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் 11

2. *ஆசியுரை*
   – ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீகலியன்
   வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள் 15

3. *சமர்ப்பணம்* – முனைவர் அனிதா ரத்னம் 17

4. திருக்கோவில் திருவரங்கப் பனுவல்
   – பேராசிரியர் சே. ராமானுஜம் 21

5. திருக்குறுங்குடி கைசிக நாடகம் 29

6. *பின்னிணைப்புகள்* 71

7. *படங்கள்* 81



ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள்
திருக்குறுங்குடி

✆ 95-4635 - 265291

ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர்
ஸ்வாமி ஸந்நிதி
திரு ஜீயர் மடம்
திருக்குறுங்குடி - 627 115.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ குருங்கமுநயே நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:

தஞ்சை பேராசிரியர் சே. ராமாநுஜய்யங்கார் ஸ்வாமிக்கு அனேக மங்களாசாசனம். கைசிக புராண நாடகம் மற்றும் திருக்குறுங்குடி ஸ்ரீ ஸ்வாமி அழகிய நம்பி ஸன்னதி ஊஞ்சல், கும்மி சோபனப் பாடல்கள் இவற்றையெல்லாம் நூலாகத் தொகுத்து வெளியிடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

சரணமாகும் தனதாளடைந்தார்க் கெல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்

ஈடு வியாக்யானத்தில் ஸ்ரீ நம்பிள்ளை "பகவத் விஷயம்தான் ஸ்பர்ச வேதியாக இருக்குமிதே. கைசிகத்தில் ஒரு சண்டாளனோட்டை ஸம்பாஷணம் ப்ராஹ்மணனின் ஆசார வைகல்யத்துக்குப் ப்ராப்தமாயிற்று" என்று அருளிச் செய்துள்ளார். இப்படி ஆழ்வார்களும் ஆச்சார்யர்களும் கைசிக வ்ருத்தாந்தத்தின் மேன்மையை அருளிச் செய்துள்ளார்கள்.

புராணங்களுள் வராஹ புராணம் ஏற்றமுடையது. அதில் 48ஆவது அத்யாயம் 'கைசிக புராணம்'. ஸ்ரீ பராசர பட்டர் இதனை 'மாகாத்மியம்' என்றே குறிப்பிடுகிறார். கைசிகம் என்பது ஒரு பண்ணின் பெயர். அந்த இசையில் எம்பெருமானைப் பாடிய பக்தன் பெற்ற பயனை விவரிப்பது இந்த மகாத்மியம். கார்த்திகை திங்களில் சுக்லபட்ச ஏகாதசியன்று தொடங்கி மறுநாள் துவாதசியில் முடிவு பெறுவது இந்த விரதம். அன்று இரவு விரதமிருந்து கைசிக மாகாத்மியத்தை வாசிப்பதும் கேட்பதும் புண்ணியத்தைக் கொடுக்கும்.

"விஸ்வாமித்ர விஷ்ணுஸித்த ப்ரீத்யரோடே தொழுகுல மானவன் நிலையார் பாடலாலே அந்தணர் வேள்விக் குறையை முடித்தமை" என்று ஆச்சார்ய ஹ்ருதய சூர்ணிகை யில் இதன் பெருமையை விவரிக்கிறார். விஸ்வாமித்ரர் ராமனுக்கு ஸுப்ரபாதம் பாடி எழுப்புகிறார். தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கனுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடி எழுப்புகிறார். நம்பாடுவான், கைசிகப் பண்ணில் நம்பியைப் பாடினவை, இவற்றோடொக்கும் என்றருளிச் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ்சீயர், நம்பிள்ளை ப்ரஸித்தம் பெற்றவர்கள். நம்பாடுவானும் அவர்களோடே ஸாம்யம் பெறுகிறான்.

இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த கைசிக மாகாத்மியம் ஸ்வாமி அழகிய நம்பியின் திருமுன்பே (ஆழ்வாராச்சார்யர்கள் குழாங்களாயெழுந்திருந்து) நடைபெறுகிறது. கைசிக புராணம் பழம் பெரும் புலவர் திரு. வீரபத்ர நட்டுவனார் அவர்களால் நாடக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏறத்தாழ 60 ராகங்களில் நம்பாடுவானால் பண்கள் இயற்றப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த பழம்பெரும் நாடகத்தை தற்சமயம் திருமதி அனிதா ரத்னம் அவர்கள் தஞ்சை பேராசிரியர் சே. ராமானுஜய்யங்கார் அவர்களுடைய இயக்கத்தில் கிட்டத்தட்ட 40 நாடகக் கலைஞர்களைக் கொண்டு புராணப் பழமை மாறாமல், வசன நடையிலும் மாற்றமில்லாமல் சிறந்த இசைக் கலைஞர் களைக் கொண்டு பக்தர்கள் மிகவும் ஆனந்தப்படும் வண்ணம் ஆண்டுதோறும் திறம்பட நடத்தி வருகின்றனர்.

இந்த கைசிக புராண நாடகத்தின் ஓலைச் சுவடி திருஜீயர் மடத்திலிருந்து வழங்கப் பெற்றது. இதனை ஆய்வு செய்து பிழைத்திருத்தங்கள் செய்த

1) ஸ்ரீ.உ.வே. மதி ஸ்ரீனிவாசன் – சென்னை,

2) ஸ்ரீ.உ.வே. ஆத்தான் அப்பு சடகோபாச்சாரியார் – ஆழ்வார்திருநகரி,

3) ஸ்ரீ.உ.வே.பா. திருநாராயண அய்யங்கார் – திருக்குறுங்குடி.

இவர்களுக்கு அடியேனுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைசிக புராண நாடகத்தினை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் நூல் வடிவாக்கம் செய்து வெளியிடும் எழுத்தாளர் திரு. சுந்தர ராமசுவாமிகளால் தொடங்கப் பெற்ற காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் மற்றும் இதனை வெளியிட முழு முயற்சி எடுத்துக்கொண்ட முனைவர் அனிதாரத்னம் அரங்கம் அறக்கட்டளை – சென்னை இவர் களையும் மனமார வாழ்த்தி பாராட்டுகின்றேன். இவர்களுடைய இறைபணி மேன்மேலும் சிறக்க ஸ்ரீ வைஷ்ணவ நம்பியின் திருவடிகளிலே இறைஞ்சி நிற்கின்றேன்.

தாஸன்
ஸ்ரீ ராமானுஜன்
ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர்
(50வது பட்டம்)



ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீகலியன்
வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்

Sri:
Srimathe Ramanujaya Nama:

SRI VANAMAMALAI MUTT
NANGUNERI - 627108.

E.mail : Varamanga12001@yahoo.com
Fax : 04635 - 250836
Phone : 04635 - 250159 (Personal)
04635 - 250119 (Office)

Srimath Paramahamsa Jagadguru
Sri Kalyan Vanamamalai Ramanuja Jeer Swami

Place : NANGUNERI
Date : 12.7.13

ஸ்ரீ

ஆசியுரை

அன்புமிகு ஆன்றோர்களே வைணவச் செம்மல்களே ஆத்திகப் பெருமக்களே 'திருக் குறுங்குடி திவ்யக்ஷேத்திர'த்தில் நூற்றாண்டுகளாக, ஸ்ரீகைசிகபுராணத்தில் [ஸ்ரீவராஹபுராணப்பகுதி] காணப்படும் "ஸ்ரீநம்பாடுவான்" திவ்யசரிதத்தை பழைய நியமங்கள் பிழளாமல் நாடகமாய் நடிப்பித்து வருகிறார்கள், அண்மை ஆண்டுகளில் 'திருக்குறுங்குடியை'யே ஜன்ம பூமியாகப் பெற்றுள்ள ஸ்ரீமான் T.V. ஸுந்தரம் அய்யங்காரின் வழித்தோன்றலான ஸ்ரீமதி 'அனிதாரத்தினம்' அவர்களால் இந்தப் பொறுப்பு, யாவரும் மெச்சும் வகையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஸ்ரீமதி 'அனிதாரத்தினம்' அவர்கள் 'நிருத்தியகலா ரத்தினம்' முதலிய பலவிருதுகள் பெற்று விளங்கும் நாரீமணி. இவ்வம்மையார் பழைய நாடகப் பாணிக்கும், புதிய நாடக உத்திகட்கும் அருமை யாக பாலம் கட்டி பார்ப்பவரையெல்லாம் தலைதூக்கி மெச்சுபவர்களாக்கி மகிழ்வெய்துவிக் கிறார்.

தற்போது 'ஒப்பு நோக்கல்' (Comparitive Study) முறையில் அனிதா ரத்தினம் 'அரங்கம் அறக்கட்டளை'யின் சார்பாக, நாகர்கோவிலில் துவக்கப்பட்டுள்ள எழுத்தாளர் திரு. சுந்தர ராமசுவாமியின் 'காலச்சுவடு' பதிப்பகத்தின் மூலம் ஒப்புநூலை வெளியிட உள்ளார்கள். இந்நூலினால் கலைமணிகள் உலகமும், ஆத்திகவுலகமும் பெரும் பயன்பெற்று விளங்கிட நாம் மனமார வாழ்த்தி, மங்களாசாஸனம் செய்து மகிழ்கிறோம்.

சுபம்.

12/7/93

ஸ்ரீ வானமாமலை ராமானுஜ ஜீயர்

சமர்ப்பணம்

திருக்குறுங்குடி எங்கள் குடும்பத்தின் ஊர். டி.வி. சுந்தரம் ஐயங்கார் குடும்பத்தின் மற்றும் குழுமத்தின் ஊர். "டி" என்பதே திருக்குறுங்குடியைச் சுட்டிக் காட்டுவதாகும். என் கொள்ளுத் தாத்தா சுந்தரம் ஐயங்கார் எங்கள் ஊர் பெருமாள் சுந்தர பரிபூரணர் என்னும் திருநாமத்தையே அடிப்படையாகக் கொண்டவர். நான் திருக்குறுங்குடி வாசி அல்ல எனினும், சிறு வயதிலிருந்தே குறுங்குடி நாச்சியாரையும் வடிவழகிய நம்பியையும் பெரும்பாலும் வருடம் தவறாமல் தரிசனம் செய்வதுண்டு. என் பெற்றோர் என்னை அழைத்துச் செல்வார்கள். மகேந்திரகிரி மலைமேல் நம்பியைச் சேவித்ததுண்டு. அங்கு பளிங்கு போன்ற ஆற்று நீரில் குளித்துக் களித்ததுண்டு. சிறுசிறு அருவிகளைக் கொண்ட சிந்து நதி என்னும் அந்த ஆறு திருப்பாற்கடல் என்ற பெயரில் ஊரின் எல்லையைத் தொடும் இடத்தில் உள்ள திருப்பாற்கடல் நம்பியைச் சேவித்து ஊரைச் சுற்றி குளத்தையும், கழனிகளையும், சோலைகளையும் வலம் வந்து மகிழ்ந்ததுண்டு. திருக்கோவிலில் பல்வேறு உற்சவக் காலங்களில் கும்மி, ஊஞ்சல், சோபனம் போன்ற பாடல்களைக் கண்டும், கேட்டும் அனுபவித்ததுண்டு. அவ்வூரைச் சார்ந்த மீனாட்சி அம்மாள் கோலாட்டம், கும்மி ஆகியவைகளை எனக்குக் கற்றுத்தந்ததுண்டு. ஆனால் அத் திருக்கோவிலில் நடைபெறும் கைசிக புராணம் என்னும் நாடகத்தைப்பற்றிக் கேட்டதில்லை.

1997ல் திரு. நா. முத்துசாமி, திரு. காசி ஆகியோருடன் பேராசிரியர் இராமானுஜமும்

கலந்துகொண்டு என்வீட்டு அலுவலக அறையில் உரையாடும் போது இந்த நாடகத்தைப் பற்றிய தகவலைத் தெரியவந்தேன். தகவலைத் தந்தவர் பேராசிரியர்தான். அத்துடன் மிகவும் நலிந்து நியமத்துக்குள் வெறும் ஓப்புக்கு நடைபெற்று வருவதை யும் தெரிந்துகொண்டேன். பாரம்பரிய ஊர் பாசம் மற்றும் கலைப் பாசம் ஆகியவை உறுத்தவே கைசிக புராண நாடகத்தை மீளப்பெற வேண்டும் என்ற ஆவலைவிட ஆதங்கமே என்னுள் எழுந்தது. எனவே பேராசிரியர் ஆலோசனைப்படி அவ்வருடமே கைசிக ஏகாதசியன்று அந்நாடகம் நிகழ்த்தும் நிலையிலே ஒளிஒலிப் பதிவு மேற்கொள்ளப்பட்டது. கைசிக புராண நாடகத்தை மீளப்பெறுவதற்க்கான முயற்சியின் முதற்படி அது எனலாம். அன்றுதான் நானும் முதன் முதலாக கைசிக புராண நாடகத்தைப் பார்த்தேன். நம்பாடுவான் வேடம் தாங்கும் குறுங்குடியையும், நம்பிக்கிழவர் வேடம் தாங்கும் காந்தம்மாளையும், பிரம்ம ராட்சசன் வேடம் தாங்கும் நம்பியையும் கண்டு உரையாடினேன்.

திரு வடிவழகிய நம்பியின் கைங்கரியம் என்ற அவர்களது பக்தி சிரத்தைதான் இக்கோவில் நாடகத்தை ஏதோ ஒருவகை மிச்சமீதியாக அன்றளவும் அவர்களால் காப்பாற்ற முடிந் திருக்கிறது. அந்த ஏதோ ஒருவகை நாடகம்கூட பலவீனமான வெறும் ஒரு சடங்கு என்ற நிலையிலேயே காப்பாற்றப்பட்டு வருவதையே அன்று உணரமுடிந்தது. தனித்தனியான தாள் களைக் கொண்ட பக்கங்களைக் கோர்த்து வைத்த கையேட்டுப் பிரதி ஒன்றை ஏந்தி நட்டுவனார் என்னும் சூத்திரதாரி போன்றவர் வார்த்தைகள் விடாமல் ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுக்க அவற்றில் சிலமட்டுமே பாத்திரங்களின் வாயிலிருந்து உதிரும் மட்டில் வெளிப்பட்டன. அடிமனத்தில் மீட்டெடுத்து நிதானமாகத் தோன்றி முழுமை பெறாது மங்கி மாயும் கொப்புளங்கள் போன்று சில வரிகள் அங்கொன்றும் இங் கொன்றுமாக பாத்திரங்களின் உரையாடல்களில் விரவி நின்றன.

ராட்சசனின் முகத்தைக் காட்டும் முகப்போலி உட் பிரகார மண்டபம் ஒன்றில் பத்து நாட்களாக பூஜைக்கு வைக்கப்பட்டு அதை அணிந்து ஆவேசமுற்று கைசிக நாடக மண்டபத்திற்கு முன் உள்ள திருவோலக்க மண்டபம் சென்று பெருமாளின் தீர்த்தம் வாங்கி சாந்தமுற்று ஆடிவரும் பாத்திரப் பிரவேசம் பரபரப்பூட்டுவதாகவும், அமானுஷ்யப் பாத்திரம் தோன்றுவதாகவும் இருந்தது. மற்றபடி காதுக்கு இனிமையாக சங்கரக் கம்பரின் முகவீணை இசையைத் தவிர நாடகத்தில் பாட்டொன்றும் பாடப்படவில்லை. முகவீணை இசைகூட பழைய சினிமாக்களில் நடித்த கர்நாடக சங்கீத

இசைக் கலைஞர்களின் பிரபலமான பாடல்களாகவே இருந்தனவே தவிர கைசிக நாடகத்தின் பாரம்பரியத்தை காட்டுவதாக இல்லை. மேலும் நாடகத்தைப் பார்க்கவோ ரசிக்கவோ ஒன்றுமில்லை எனத் தெரிந்தும் அத்தருணம் அம்மண்டபத்தில் அமர்ந்திருப்பதே புண்ணியம் பெறும் செயலாகும் என்று கருதும் விரல்விட்டு எண்ணக்கூடிய வயதான பார்வையாளர்களே காணப்பட்டனர். இருந்தும் தன்னுள் தேடிப் பெறவேண்டிய கூறுகள் பல உள்ளன என்றும், அவற்றைப் பெற்று தான் ஒரு வடிவம் கொண்டால் அது பாரம்பரியக் கலையொன்றின் மீட்சியாகும் என்று என்னுள் பட்டது. அதனை வெறும் உணர்வு என்பதைவிட ஒரு நம்பிக்கை எனலாம்.

அந்த நம்பிக்கை வீணாகாது என்று வடிவழகிய நம்பி கையசைக்க ஓன்றரை வருடங்களாயின. பேராசிரியர் இராமானுஜம் அவர்கள் பலமுறை நெல்லை மாவட்டத்தில் சுற்றியலைந்து பலரைச் சந்தித்தும் பலன் கிடக்காது சோர்ந்த நிலையில் திருநாராயண ஐயங்கார் நகல் எடுத்துக்கொள்ள கொடுத்து உதவிய ஓலைச் சுவடி திரு வடிவழகிய நம்பியின் முதற் கையசைவு எனலாம். அதன் அடிப்படையில் 1999ல் பேராசிரியர் தஞ்சை வேங்கடேசப் பெருமாள் கோவிலில் ரேவதி என்னும் துரைக்கண்ணு அம்மாளைக் கொண்டு ஏட்டில் உள்ளதான 'மஞ்சனம் அழகிய நம்பி' பாடலுக்கு அபிநயம் பிடித்துக் காட்டச் செய்தது கைசிக புராண நாடகத் தில் மீளப்பெறுதலுக்கான நம்பிக்கைக்கு வேர்பிடிப்பை நல்கியது. மேலும் திரு ஹேரம்பநாதன் தன் சிஷ்யர்களைக் கொண்டு அவ்வாண்டு கைசிக ஏகாதசியன்றே திருக்குறுங்குடி யில் கைசிக மண்டபத்தின் எதிரே திருவோலக்க மண்டபத் தில் ஆழ்வார்கள் ஆச்சாரியார்கள் உட்பட நாச்சியார்கள் சமேதம் எழுந்தருளியுள்ள திரு வடிவழகிய நம்பி முன்னால் மீட்டுருவாக்க அரங்கேற்றம் நிகழ்த்தியதும், நாடகம் ஓலைச் சுவடியில் உள்ளபடியே பாடல்கள், உரையாடல்கள் கொண்ட மரபுரீதியான வடிவம் பெறும் என்ற உறுதி தோன்றியது. இவ்வுறுதி தோன்றக் காரணம் பாடல்கள் பல ராகங்களில் வீணை இராமதாசால் இசையமைக்கப் பெற்றதுதான்.

எனினும் ஒரு மரபு நாடகத்தை மீளப்பெறும் முயற்சியில் நடைமுறையிலுள்ள ஒரு மரபு நாடகத்திலிருந்து உத்வேகம் பெறலாமே தவிர அதிலேயே வேரூன்றி நிற்கக்கூடாது. நட்டுவனார் மற்றும் இசையமைப்பாளர் ஆகியோரது பாகவதமேளாவின் தொடர்பு அதன் ஒரு பிரதிபலிப்பாகவே கைசிகமும் மாறிவிடலாம் என்று ஒரு தோற்றமளித்தது. இசை, இயல் வல்லுனர்கள் வைத்தியலிங்கத்தையும், அரிமளம்

பத்மநாபனையும் கொண்டு பேராசிரியர் நடத்திய இசை யமைப்பு ஆய்வுகளும், உ.வே. திருநாராயண ஐயங்காரின் நாடகத்தின் உட்பொருளான வைணவத் தத்துவ விளக்கங் களும், கைசிக நாடகக் கலைஞர்களுக்கு நாங்கள் நடத்திய சுய புலப்பாட்டுப் பட்டறைகளும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே கைசிக நாடகத்திற்கென்ற பாரம்பரியத்தின் மீட்சி யென்னும் முழுமையான சாயலைத் தந்துள்ளன. இசையும் வெறும் ஒரு நடன அரங்கேற்ற பாங்கிலிருந்து கோவில் அரங்கியல் பான்மை பெற்றுள்ளது. இப்பான்மை இந்நாடகத் தின் ஓலைச் சுவடியிலிருந்து மாற்றம் இன்றி பெரிதும் ஒட்டிநிற்பதுடன் உத்வேகமும் பெற்றுள்ளது.

இத்தருணத்தில் ஓலைச் சுவடியிலுள்ளபடியே, எழுத்துப் பிழைகள் திருத்தப்பட்டு நூலாக வெளிவருகிறது. மிகுந்த ஈடுபாட்டுடன் சுவடிப் பிரதிகளைத் தேடிப்பெற்று வைணவ தத்துவார்த்த அறிஞர்கள் ஒப்புநோக்கல் உதவியுடன் மீட்டுருவாக்கமும், நூல் வடிவமும் பெறுவதற்கான படியை தயாரித்த பேராசிரியர் இராமானுஜத்திற்கு நான் கடமைப் பட்டுள்ளேன்.

கோவில் நாடக அரங்கப் பிரதி ஒன்றை ஆவணப்படுத்தல் என்பதற்கப்பால் பாரம்பரிய பனுவல் ஒன்றினை எதிர்காலத் திலும் நிலைநிறுத்தும் பணியாக இந்நூல் அமையும். அத்தகைய பணியாகக் கைசிக புராண நாடகத்தை நூல்வடிவாக வெளிவர சென்னை அரங்கம் அறக்கட்டளையையும் பங்கேற்கச் செய்த திரு. கண்ணனையும், காலச்சுவடு பதிப்பகத்தையும் நன்றியுடன் பெரிதும் பாராட்டுகிறேன்.

திருக்குறுங்குடி மடம் ஐம்பதாவது பட்டம் ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள், வானமாமலை மடம் முப்பதாவது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஜகத்குரு ஸ்ரீ கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் ஆகியோர் ஆசியுரை அருளியுள்ளனர். அவர்களது பாத கமலங்களுக்கு எனது உளமார்ந்த நன்றியை அர்ப்பணித்து தன்யளாகிறேன்.

பெருமாள் பேரருளால் எல்லாச் செயல்களுக்கும் எனக்கு வழிகாட்டியாக நின்ற என் பெற்றோர்கள் திரு. டி.வி.எஸ். ரத்னம், திருமதி லீலா ரத்னம் ஆகியோருக்கு இக் கைங்கரியத்தை யும் காணிக்கையாக்குகிறேன்.

முனைவர் **அனிதா ரத்னம்**

திருக்கோவில் திருவரங்கப் பனுவல்

மலையாள நாடகத்தில் ஒரு மைற்கல் என்று கருதப்படும் சங்கரப் பிள்ளையின் "கருத்த தெய்வத்தைத் தேடி" நாடகத்தின் கரு, தன்னுடன் அலைந்து தன் மூட்டைகளை சுமந்த தெய்வத்தைக் காலங்கடந்து அறிந்து காண இயலாது அலையும் கண்ணிழந்த கூட்டமாகும். அதுபோன்றே காலங் காலமாக நின்று நிலவும் "குத்துவிளக்கடி நிழல்" எனும் உவமைப் படிமம் போன்றது கைசிகபுராண நாடகம் பற்றிய எனது தெரிதலும். நாங்குநேரியை சொந்த ஊராகக் கொண்டிருந்தும், அதன் பத்து கிலோமீட்டருக்கு அருகிலுள்ள எனது தாயாரின் சொந்த ஊரான திருக்குறுங்குடியையும், அத் திருப்பதியில் உள்ள வடிவழகிய நம்பி பற்றியும் அதிகமாக ஒன்றும் அறியாதவன். குறிப்பாக இத் திருக்கோவிலுள்ள கைசிக புராணத்தையோ, அரையர் சேவையையோ 1992வது வருடம்வரை அறியாதவன்.

அந்த அறிதல்கூட தமிழ்ப் பல்கலைக் கழகத்து நாடகத்துறைப் பேராசிரியராக இருந்தபோது நாட்டார் வழக்கிலுள்ள அரங்கத் தேடலில் தற்செயலாகக் கிடைத்தத் தகவலாகும். தேடலின் தொடர்ச்சிக்கான உந்துதலாக அந்தத் தகவல் அமைந்து, முயற்சியின் சங்கிலித்தொடரின் முதற் கண்ணியாகப் பரிமணக்கலாயிற்று. என் தந்தையா ரின் உடன் பிறப்பான ரெங்கம் அத்தையார் தந்த அத்தகவல் அவ்வாண்டு கைசிக ஏகாதசியின் முந்தைய நாளாகும். எனவே, உடனடியாக

மறுநாளே நாடகத்தை காணுகின்ற வாய்ப்பும் கிடைத்தது. பொதுவாக கௌசிக நாடகம் என்றே எல்லோரும் கொண்டிருந்தனர் எனலாம். இன்றும் தேவார இசையில் கௌசிக ராகம் என்றே வழங்கப்படுவதைக் காணலாம். கைசிகம் என்பதே பொருத்தமானது என்று அறிய நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு திருச்சூரில் வடமொழிப் பேரறிஞர் நாராயணப் பிஷார்டி மூலமே தெளிவு பெற்றேன்.

கைசிக நாடகத்தைக் கண்ட முதல் அனுபவம் அகழ்வு ஆராய்ச்சியாளனின் மன உணர்வு ஒன்றையே ஊட்டியது. கார்குறிச்சி அருணாசலம் என்னும் இசை மேதையால் "உங்களைப் போன்ற நாதசுவர இனிமை நாதம் எங்களைப் போன்றவர்களுக்குக் கிடைக்கப் பெறவில்லையே" என்று பாராட்டப் பெற்றவர் வானமாமலைத் திருக்கோவில் வித்துவான் சங்கரக் கம்பர். அவரது முகவீணை ஒலியொன்று தான் இப்பாரம்பரியத்தின் மிச்சம் என்பதையே அன்றைய நிகழ்வு எனக்குக் காட்டியது. அக்குழல் இனிமையும் அன்றையத் திரைப் படப்பாடல்களுள் மட்டும் ஒதுங்கியிருந்தது. சங்கரக் கம்பரின் சாஸ்திரீய இசை ஆழத்தையோ, கைசிகம் என்னும் பண்ணின் அடிப்படையாகக் கொண்ட வொரு நாடகப் பான்மையையோ காட்டுவதாக அமையவில்லை. கானமார்க்கத் தின் சிறப்பைக் காட்டும் இந்நாடகத்துள் கிஞ்சித்தளவு ஒரு பாட்டுகூட இசைக்கப்படவில்லை. மற்றபடி தேவதாசி ஒழிப்பு சட்டம் நிறைவேறிய ஆண்டுகள் பல கடந்தும் தெய்வ கைங்கரியமாகக் கருதித் தம் எழுபத்தி ஐந்து வயதுக்கு அப்பாலும் நம்பிக்கிழவர், நம்பாடுவான் வேடங்கள் தரித்து ஒப்புக்காவது நாடகத்தை நிறைவடையச் செய்துகொண்டிருந்த காந்தம்மாள், குறுங்குடியம்மாள் ஆகியோருடன் இராட்சச வேடம் தாங்கும் நம்பி ஆகியோரின் அர்ப்பண மனப்பான்மை களே ஆகும்.

இந்நாடகத்தின் பொறுப்பு மரபு உரிமை என்ற முறைமைப் படி நட்டுவனார் என்ற நிலையில் தாங்க வேண்டியது சங்கரக் கம்பரே ஆகும். ஆனால் அவர் தமது இயலாமையால் தமது புதல்வர் நாராயணக் கம்பரிடம் ஒப்படைத்தார். நராயணக் கம்பர் கோயிற் கலையான இசைத் தளத்திலிருந்து விலகி ஆரம்பப்பள்ளி ஆசிரியராக மட்டும் தம்மை சுருக்கிக் கொண்டார். கைசிகபுராண நாடகத்தைப் பொறுத்தவரை எழுதி வைத்திருந்த சில தாள்களின் தொகுப்பை பனுவலாக் கொண்டு வார்த்தைகளை நினைவுபடுத்தல் என்னும் அரங்க மரபை மேடையில் நின்றே ஒவ்வொரு வார்த்தைகளாக எடுத்துச் சொல்லி அவற்றை பாத்திரங்களும் சொல்லுவதாகப்

பேணப்பட்டதையே கண்டேன். அத்தகைய முறமையைக் கொண்டதோர் நாடக மரபாக கைசிக நாடகம் இருக்கலாம் என்ற அனுமாணம் கூட ஒரு நிறைவை தரவில்லை.

பின்னர் பலமுறை வேண்டியபின் நாராயணக் கம்பர் அனுப்பித் தந்த தாள்கள் நாடகத்திற்கு முழுமையான ஒரு பிரதி உண்டு என்னும் உணர்வையும், ஆவலையும் என்னுள் ஏற்படுத்தியது. ஆனால் மூலமும் முழுமையுமான பனுவலை அதன் ஆதாரத்துடன் பெறுவது முயற்சியும் தேடலுமாகவே இருந்தன. 1997இல் திருமதி அனிதா ரத்தினம் அவர்கள் என்னிடம் எப்படியாவது இந்நாடகத்தை மீளப்பெற வேண்டும் என்ற தமது ஆதங்கத்தைத் தெரிவித்திருந்தார். டி.வி.எஸ் குடுபத்தைச் சார்ந்தவர் என்ற முறையில் திருக்குறுங்குடி நம்பிமேல் பூர்வீகத் தொடர்புடன் கூடிய பக்தியும், நாட்டியம் மற்றும் அரங்கக் கலை மீதுள்ள பக்தியும் அவரது ஆத்மார்த்தத் தூண்டலாக இருந்திருக்க வேண்டும். மேலும் ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை மூலம் கோவில்களை, குறிப்பாக நம்பி கோவிலைப் புதுப்பிக்கும் வேணு ஸ்ரீனிவாஸனின் மரபு மாறாத தமிழகக் கோவில் கட்டிடக் கலையின் முருகியல் உணர்வுடன் பிணைந்த தூண்டலுமாகும் அது.

ஒருவருட இடைவெளிக்குப் பின் முடியுமா என்று அறிந்துகொள்ள ஆறு மாத கால அவகாசம் வேண்டியிருந் தேன். பலமுறை வடிவழகிய நம்பித் திருக்கோவில் ஸ்ரீகார்யம் உ.வே. திருநாராயண ஐயங்காரிடம் நடத்திய குசலங்களில் இதுகுறித்து உசாவியதுண்டு. எனினும் 1999ஆம் வருடம் தொடக்கத்தில்தான் பெருமாள் திருவுள்ளம் கனிந்தருளியது எனலாம். திருக்குறுங்குடி ஜீயர் மடத்திலிருந்து தேடிக் கண்டுபிடித்து கைசிகபுராண நாடகத்தின் ஓலைச் சுவடி ஏட்டுப்பிரதியை நகல் எடுத்துத் திரும்பத்தருவதாக சத்தியப் பிரமாணம் செய்தபின்னர் அவர் என்னிடம் தந்தார். உடனடி யாக ஓலைச் சுவடியிலிருந்த நாடகப் பனுவலை எமது தமையனார் திரு. சுந்தரராஜ ஐயங்கார் எவ்வித மாற்றமோ பிழைத் திருத்தங்களோ இன்றி தமது தெளிவும், அழகும் உடைய கையெழுத்துப் படிவமாக்கித் தந்தார்.

அவ்வோலைச் சுவடியில் வீரபத்திர நட்டுவனார் என்பவரது பெயர் காணப்படுகிறது. கேரளப் பல்கலைக் கழக தமிழ்த்துறை தலைவர் முனைவர் நாச்சிமுத்து அவர்கள் அப்பல்கலைக் கழக கையெழுத்து நூலகத்திலுருந்து எடுத்துத் தந்த ஓலைச் சுவடியின் மறுதோன்றிப் பதிப்பில் வீரபத்திர நட்டுவனாரின் பெயர் காணப்படவில்லை. நாடகப் பனுவலில் காணப்படும் உரையாடல்களின் நடை கைசிகபுராணம்

12ஆம் நூற்றாண்டு இராமானுஜரின் சீடர் பராசரபட்டரது வியாக்யானத்தின் அடிப்படையில் மணிப்பிரவாள நடையையே மாதிரியாகக் கொண்டதாக உள்ளது. ஒலைச் சுவடியில் காணும் பாடல்கள் வெண்பா, சிந்து ஆகிய தலைப்புக்களைத் தாங்கியுள்ளன. எனவே நாடகப் பனுவல் கவிதை இலக்கணம் வகை ஆகியவற்றில் பழக்கமுள்ள ஒரு கவிஞரால் இயற்றப்பட்டிருக்கவேண்டும். வீரபத்திர நட்டுவனார் ஒரு கவிஞரும்கூட என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

மேலும் 1530–34 வருடங்களில் விசயநகரப் பேரரசின் அச்சுத ராயரது அபிமான பார்யாள் கைகசிக புராண நாடகத்திற்கு மான்யம் வழங்கியதாக தஞ்சை சரசுவதிமகாலில் தெலுங்குப் பண்டிதராக இருந்த திரு. விசுவநாதன் ஒரு தகவல் கொடுத்திருந்தார். அதற்கான ஆதாரங்களைத் தருவதற்குள் அவர் இயற்கை எய்திவிட்டார். திருக்குறுங்குடியைத் தவிர வேறு எந்தத் திருக்கோவிலிலும் இந்நாடகம் நடைபெற்றதாகத் தெரியவில்லை. வீரபத்திர நட்டுவனாரோ சங்கரக் கம்பரின் முந்தைய தலைமுறையைச் சார்ந்தவர் என்று தெரிகிறது. எனவே வீரபத்திர நட்டுவனார் இதன் ஆசிரியராக இருக்க வாய்ப்பில்லை. இந்நாடகத்தின் பயிற்சி மற்றும் நிகழ்த்துதல் பொறுப்பு ஆகியவற்றை வாரீசு அடிப்படையில் கையாண்ட வீரபத்திர நட்டுவனாரது சொந்த நகல் பிரதியாக இருக்கவேண்டும் அது.

கேரளத்து கூடியாட்டம், கிருட்டினனாட்டம் போன்று பெருந்தெய்வ வழிபாட்டு முறையிலான கோவில் பிரகாரத்தில் உள்ள நாடகங்கள் தமிழகத்தில் கைசிகபுராணம் தவிர வேறு இருப்பதாகத் தெரியவில்லை. கைசிகம் என்னும் செவ்வியல் பண்ணின் பெயரைத் தாங்கியுள்ளதும், தலைமைப் பாத்திரமாகிய நம்பாடுவானது கவிதை வரிகளில்

...மெய், மலகிரி, காந்தாரம், துரையா நாட்டை, தனாசு, கொல்லி, துத்தம், வசந்தா போன்ற கரையா கீதம் பல பாடி கைசிகமும் பாடினேன்."

என இராகங்கள் கூறப்படுவதும், நட்டுவனார் நாதஸ்வர இசைக் கலைஞராகவும், பாத்திரங்களைத் தாங்கும் தேவதாசிப் பெண்கள் நடனமாதர்களாகவும் உள்ளனர் என்பதாலும் இந்நாடகம் ஒரு செவ்வியல் கலைவடிவம் சார்ந்தது என்று கூறலாம். ஆனால் கேரளத்து கோவில் மரபு நாடகங்களில் ஆவேசம் பெறும் பாத்திரங்கள் ஏதுமில்லை. நாட்டார் மரபு நாடகங்களில் உள்ளது போன்று முகமூடி அணிந்ததும்

ஆவேசம் பெறும் இராட்சசன் பாத்திரம் இந்நாடகத்தில் உள்ளது. மேலும் 'கேளும் பிள்ளாய்' 'சொல்லும் பிள்ளாய்' போன்ற பாத்திரங்களின் தன்நிலை, முன்னிலைப்படுத்தும் சொல் விளித்தொடர்களின் ஆவர்த்தனங்களோடு ஒவ்வொரு பாத்திரங்களின் உரையாடல்கள் தொடங்குவதும், சில வட்டார சொற்வழக்குகளும் இந்நாடகத்திற்கு ஒரு நாட்டார் நாடகத் தொனியை உள்ளோட்டமாகத் தருகிறது.

கார்த்திகை மாதம் சுக்லபட்ச ஏகாதசியை ஒட்டிய துவாதசி புலர் காலையில் கைசிக புராணம் பராசர பட்டரின் வியாக்யானத்துடன் தமிழகத்துப் பெரும்பாலான வைணவக் கோவில்களில் வாசிக்கப்படுகிறது. இதனை வாசிக்கும் படனக்காரர்களுக்கு திருக்கோட்டியூர், திருவரங்கம் போன்ற திருப்பதிகளில் பிரம்மரதம் எனும் மேல்வருணத்தார் தாங்கிச் செல்லும் பல்லாக்கு ஊர்வல மரியாதை நடைபெறுகிறது. நம்பாடுவான் என்னும் திருக்குலத்தான் திருக்கதையைப் படித்ததற்காக அப்படனக்காரர்களுக்கு அளிக்கப்படும் மரியாதை அது. நம்பாடுவான் என்னும் திருக்குலத்தானை பரமனைப் பாடிப் பயின்ற காரணத்திற்காக கை தொழுதேத்தும் குறியீடு அது.

பயிலச் சுடரொளி மூர்த்தியைப் பங்கயற் கண்ணனைப்
பயில இனியதோர் பாற்கடல் புகுந்த பரமனைப்
பயிலும் திருவுடையார் எவரேனும் அவர்கண்டீர்
பயிலும் பிறப்பிடைதோர் எனையாளும் பரமனே

எனும் நம்மாழ்வார் காட்டித்தந்த வைணவ சமூகப் பார்வை அது. இத்தகைய பார்வை ஒன்றின் நீட்சியாக கைசிகப் பண்பாடி சோமசர்மா என்ற அந்தணர்க்கு நம்பாடுவான் என்ற திருக்குலத்தான் சாபவிமோசனம் கொடுத்தான் என்னும் ஐதிகக் கதை, நிகழ்வு நடந்த திருத்தலம் திருக்குறுங்குடி. இப்பதியில் மட்டும் கைசிக ஏகாதசியன்று இரவு முழுதும் நாடகமாக நிகழ்த்தப் படுதலும், தொடரும் துவாதசி புலர் காலையில் பராசரப் பட்டர் வியக்கியானம் படனமாக வாசிக்கப்படுதலும் கோவில் கைங்கரியத்தின் பாகமாகியுள்ளது.

பராசர பட்டரின் வியாக்யானத்துடன்கூடிய கைசிக புராணம் ஒன்றுக்கு மேற்பட்டு அச்சுவடிவில வந்துள்ளது. அதன் ஆங்கிலத்திலான வெல்பனின் மொழிபெயர்ப்பும் முனைவர் வே. ராகவனின் நினைவு மலரில் கட்டுரையின் பாகமாக வெளிவந்துள்ளது. கைசிக புராண நாடகமோ தற்போதுதான் அச்சேரவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது மீட்டுருவாக்கத் தொடர்ச்சியின் பதினைந்து

ஆண்டுகளுக்குப் பிறகேயாகும் மீட்டுருவாக்கம் தொடங்கிய போது நிகழ்த்துதல் பனுவலை தஞ்சை மரபுவழி நட்டுவனார் ஹேரம்பநாதனுடன் உருவாக்கும் பணியில் பெரிதும் உதவியவர் உற்ற நண்பர் காந்திகிராமம் ம. வேலுசாமியாவார். நிகழ்த்துதலுக்கான இசைவடிவுக்கு தொடக்கம் குறித்துததநதவா தஞ்சை வீணை வித்துவான் இராமதாஸ் ஆவார். கைசிகம் தமிழ்ப் பண்ணின் பெயராகையால் அவ்விசை மரபிற்கிசைந்த இராகங்களின் வடிவாக்கத்தில் துணை செய்தவர்கள் இசை வல்லுநர்கள் ம. வைத்தியலிங்கமும், அரிமளம் பத்மநாபனும் ஆவர். குறிப்பாக வைத்தியலிங்கம் அவர்கள் பனுவலாக்கத் திற்குப் பெரிதும் உதவினார். அவருடன் குறிப்பிட வேண்டியவர் கு. முருகேசனாவார். நாடக ஆக்கத்திற்கு மட்டுமன்றி பிரதி வடிவாக்கங்களிலும் உதவிக்கொண்டிருப்பவர்கள் இராஜ மாணிக்கமும், விஜயகுமாரும் ஆவர்.

இந்நாடகத்தின் மீட்டுருவாக்க முயற்சியில் ஈடுபடத் தொடங்கியதும் அரங்கவியலான் மேற்கொள்ள வேண்டிய ஒரு சாதனைக்கான பரிமாணத்தை உணர்த்தியவர் சுந்தர ராமசாமி அவர்கள். அதே தொனியில் என்னைக் கைசிக புராண நாடகத்துடன் இணைத்து நண்பர்கள் பலரிடம் அறிமுகப் படுத்தியதுண்டு. அவ்வாண்டு அவசியம் வருவதாக அழைப்பை ஏற்றுக் கொண்டவர் நாடகத்தைக் காண இயலாது பிரிந்தமை எனக்கு ஏற்பட்ட நிரந்தர இழப்பாகும். நாடகத்தை அச்சேற்றி நூல் வடிவில் கொண்டுவரும் பணியை சுந்தர ராமசாமியால் தொடங்கப்பெற்றக் காலச்சுவடின் பதிப்பகமூலம் கண்ணன் ஏற்றுள்ளது ஒரு மனநிறைவைத் தருகிறது. மேலும் அச்சாக்கத்தை அனிதா ரத்தினத்தால் தொடங்கப்பெற்ற அரங்கம் அறக்கட்டளையுடன் ஆற்றியுள்ளமை மீட்டுருவாக்கப் பணியில் காலச்சுவடும் இணைவதைக் காட்டுவதாகும்.

ஆழ்வார் திருநகரி ஊ.வே. ஆத்தாளு அப்புச்சடகோப ஐயங்கார் சுவாமிகள், குறுங்குடி ஊ.வே. திருநாராயண ஐயங்கார் சுவாமிகள் ஆகியோர் ஓலைச்சுவடியின் எழுத்து மற்றும் வார்த்தைப் பிழைகளைத் திருத்தித் தந்துள்ளனர். மதிப்புறு திரு. ம.தி. ஸ்ரீனிவாசப் பெருமகனார் திருத்தங்களுடன் கூடிய இப்பதிப்பிற்கு வடிவம் தந்துள்ளார். ஓலைச்சுவடியில் உள்ளவாறுள்ள பனுவலையும் இணைத்துத்தரும் ஆலோசனையை யும் தந்தவர் அவர்.

ம.தி. ஸ்ரீனிவாஸன் அவர்களின் சிந்தனைப்போக்கின் ஆழத்தையும், ஈடுபாட்டுடன் செயலாற்றும் பாங்கையும் உணரச்செய்ய உதவியவர் திருக்குறுங்குடி மடம் ஐம்பதாவது

பட்டம் ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகளே. கைசிகபுராண நாடகத்தோடு ஸ்வாமிகள் காட்டும் அக்கரையை உணரும் மற்றொரு சம்பவமும் இங்கு கூறவேண்டியதாகும். இந்நூலின் ஆசியுரைக்காக வேண்டி திருக்குறுங்குடி சென்ற போது ஜீயர் ஸ்வாமிகள் மடத்தில் இல்லாது சென்னை யாத்திரைக்கு எழுந்தருளியிருந்தார். வருகையை அறிந்து கொண்ட ஸ்வாமிகள் மறுபடி திருமடத்தில் தரிசித்தபோது தாம் தயாராக்கி வைத்திருந்த ஆசியுரையைத் தந்தருளினார்.

வானமாமலை மடம் முப்பதாவது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஜகத்குரு ஸ்ரீ கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் மதிப்புரை அருளியதும் மறக்கமுடியாத சம்பவமேயாகும். தமது உடல்நிலை சரியில்லாத காலையில் ஸ்வாமிகளைத் தரிசித்தேன். தாம் பதினைந்து நாட்களுள் தில்லிக்கு யாத்திரை செய்யவிருப்பதாகவும், அதற்குள் ஒருநாள் வந்து அருளுரையை பெற்றுக்கொள்ளும்படி அன்பு கலந்த உரிமையுடன் ஆணை யிட்டார். அவ்வாணையை ஏற்று ஜீயரின் யாத்திரைக்கு இரண்டு நாள் முன்பு தரிசித்த போது ஏராளமான பிற மாநில சிஷ்யர்கள் சூழ்திருந்தனர். அதற்கிடையிலும் அழைத்து மாலை நான்கு மணிக்கு வந்துப் பெற்றுச் செல்லுமாறு தெரிவித்தருளினார். சரியாக நான்கு மணியளவில் கணினியில் அச்சடிக்க பெற்ற மதிப்புரையை தந்து ஆசிகூறி அருளினார்.

ஒரு கோவில் நாடகம் என்ற அளவில் ஆன்மீக ஆச்சாரியார்கள் இருவர்களின் ஆசியுரைகள் இப்பனுவலுக்கும் மற்றும் அதன் நிகழ்த்துதலுக்கும் ஒரு ஆவண ஆதாரமாகி நிற்கிறது. தெய்வீக ஆராதனையில், 'நாட்டியம் சமர்ப்பயாமி' என்று நாடகத்தைக் காணிக்கையாக வழங்கல் வழக்கம். அஃது வெறும் ஒப்புக்கு என்று இல்லாமல் இந்நூல் ஒரு நிரந்தரக் காணிக்கையாக தெய்வீகக் கைங்கரியத்திற்குள் மட்டும் ஒதுங்காமல் ஒரு மரபு நாடகத்தின் மீட்சியாகத் தமிழ் மொழிக்கும் திகழ்கிறது

சே. இராமானுஜம்

ஓம்
ஸ்ரீராமஜெயம்
ஹரி: ஓம்
ஸ்ரீநம்பிராயர் துணை

திருக்குறுங்குடி
கைசிக நாடகம்

நீடூழி வாழ்க

திருவாக்கும் செய் கருமம் கைகூப்பும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோர்கள் யானை முகத்தோனைக் கருதிக்
காதலால் கைகூப்புவது என்கை.

கண்ணன் குருங்கைக்கவுசிக நாடகமென்றே காசினியில்
எண்ணும் பழமறைபோல் விளங்க எழில் அரங்கா
தண்ணந் துளபத்தனிமாலை ஸ்ரீ சடகோபன்
வண்ணம் புதிய மகிழ்மாலை மார்பினன் வாழியவே.

சீர்கொண்ட தென் குருங்கைத் தேவ தேவேச நம்பியைப்
பார் கொண்ட தாளிணையைப் பணிந்தேத்தும் பாகவதன்
ஏர் கொண்ட சாரீரம் தன்னை இசைத் தமிழால் பாடுதற்குத்
தார் கொண்ட மகிழ் மாலை ஸ்ரீ சடகோபன் வாழியவே.

கங்கை தொழு தாளன் கருணாகரன்
மங்கை புணரும் மணி மார்பன் – துங்கன்
அரிமருகன் அன்பர்க்கு அருள்புரியும் கந்தன்
கரிமுகன் நின் நாடகத்தின் காப்பு.

கொண்டாடும் வராக புராணத்தின் குறிப்பு உரைத்த
சண்டாளப் பிரம ராட்சதன் என்னும் பிறை எயிற்றோன்
பண்தாளத்துடன் பாடப் பாவலர் கருணையினால்
வண்டாரும் தார்சேனை மாமுதல்வன் காக்கவே.

நம்பியைச் சேவிக்க நடந்ததுவும் பாகவதன்
வெம் பிரம ராட்சதரின் கைமேவியதும் – அன்பாய்த்

தொடுத்ததுழாயானைத் துதித்தபண்ணின் சற்றே
கொடுத்தவனை உற்றனையும் கூறு.

திரு ஏகாதசி தன்னில் தேசத்துள்ளோர் மகிழவே
சேவிக்கும் விருந்தாகச் சிறப்பித்தோன்
மருமலர் வனம் சூழ் தென்குருங்கை நம்பியைப் பாடும்
மாதங்கன் பாகவதன் தோன்றினானே.

உரை

கௌசிக ஏகாதசி விரதத்தைக் காசினியில் இலகக் களிப்புடன்
சிறப்பித்த கருணைவல்லோன் – பவவினை தீர்த்து அருள்
தென்குருங்கை நம்பியைப் பாடும் பாகவதனும் வந்து
தோன்றினானே.
தென்குருங்கை நம்பியைப் பாடும் பாகவதனும் வந்து
தோன்றினானே.

சீர்மேவு உபசாரமுறை அலங்காரத்துடன் கீதம் தெளிவுறத்
தினந்தோறும் சிறந்தளிப்போன்

பார்மேவு புகழ் அழகிய நம்பிதன்னைப் பாடும் பாகவதன்
வந்து தோன்றினானே.

சிந்து

மஞ்சனம் அழகிய நம்பி – தனை
வழுத்துவோர் வாழ்வித்த நம்பி! – வண்ணம்
அழகிய நம்பி! வடிவழகிய நம்பியே!
நஞ்செனக் கிடந்தோன் பலிதீர்த்தருள்
நாளும் புதியதோர் நம்பி! – நலமிகு
செங்கனி வாயுடை நம்பி!
நாத வினோதனனே சரணம்.

வேறு

ராட்சதன்

நீர்கொண்ட முகில்மேனி நெடியதாய் இனிதுளிர்ப்பத்
தார்கொண்ட மின்னனவே தயங்கித் தயங்கிடவே
கூர்கொண்ட ஆரணத்தில் இடிஎனவே குரல் முழக்கிப்
போர்கொண்ட பிரமராட்சதன் என்னும்பிறை எயிற்றோன்

சிந்து

வரிவழி இணை அனல்பொழியவே
முகமிசை மிகுபுகைஎன நிலம் பெருவுற அதிரவே
பெரிய கானகம் அதில் இருளிலே – பயமுற
பிரமராட்சதன் வந்து தோன்றினானே.

பாகவதன் வருதல்

செந்தமிழ்க் குருங்கையில் நகர்தனை நோக்கியே
திருமணி வடம் மார்பில் சிறந்து இலங்கவே
அந்தமில் திருமண் விளங்கவே...
அங்கையில் வீணையுடனே
அழகிய பாகவதன் நடந்தனனே.

வசனம்

பாகவதன் : ஓகோ! வெருட்டாதையும் பிள்ளாய்! மேல் விழாதே பிள்ளாய்! நில்! நில்லும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : (மறு வசனம்) நிற்கிறது ஏது? பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : வாரும் பிள்ளாய் ராட்சதனே! ராட்சதபுங்கவனே! ராட்சத சிரேஷ்டனே! உன்னைப் போல ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல மஹா உத்தமன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல உண்மைக்கு ஒருவன் இல்லை பிள்ளாய்! நீதான் புறபட்ட புறப்பாடும்; உன்னுடைய வேஷமும் உன்னுடைய புஜபல பராக்கிரமும் மஹா நன்றாய் இருந்தது பிள்ளாய்! ராட்சதனே! நில்லு; நில்லும் ராட்சதனே!

ராட்சதன் : நிற்கிறது ஏது பிள்ளாய் பாடுவானே! இப்போது தானே உன்னைக் கொன்று தின்று பசி தீர்க்கிற பிரதா பத்தைப் பாரும் பிள்ளைப் பாகவதனே!

பாகவதன் : வாராய் ராட்சதனே ராட்சத புங்கவனே! சிரேஷ்டனே! உன்னைப் போல மஹா நல்லவன் இல்லை பிள்ளாய். உன்னைப் போல ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய்! நில்! நில்லும் பிள்ளாய்! ராட்சதனே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன் அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : ஆனால் சொல்! சொல்லும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் :

வெண்பா

சூறாவளி எனவே தோற்றிடக் கானகத்தில்
மாறாமல் மேல்விழுந்து வந்தாய் நீ – சீறா
மனக்கவலை உற்று எதிர்ந்தவல் அரக்கா என்பால்
உனக்கு வழக்கு உண்டோ?

வசனம்

வாரும் பிள்ளாய் ராட்சதனே! நீதான் புறப்பட்ட புறப்பாடும்! உன்னுடைய வேஷமும் புஜபல பராக்கிரமும் நன்றாய் இருந்தது பிள்ளாய் ராட்சதனே! நான் இன்று திருவேகாதசி விரதம் அனுஷ்டித்து, சுவாமி அழகியநம்பியைச் சேவிக்க வருகையிலே, இந்த அர்த்த ராத்திரி பாதி நேரத்திலே, அத்துவானக் காட்டுக்குள்ளே, முகில்போல மேனியும் பிறை போல எயிறுமாக நின்று, நிலம் அதிர ஓடி, மஹா நிஷ்டூரமாக அலறி, இரு கண்கள் நெருப்பாய், இப்போது தானே, என்னைக் கொன்று தின்று போடுகிறோம் என்று வருகிறாயே! உனக்கும் எனக்கும் முன்னாள் வழக்கு உண்டோ? சொல்; சொல்லும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : வழக்காகிறது ஏது? நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் பாகவதனே.

பாகவதன் : ஆயினும் சொல்; சொல்லும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் :

வெண்பா

என்னைப் பசியால் படைத்த பிரமன் எனக்கென்று
உன்னைச் சிறப்பாக அளித்தானே – என்னே கேள்
திண்ணம் அறத்தின்று பசிதீர்ப்பதே அல்லாது
எண்ணுவதும் உண்டோ இனி?

வசனம்

வாரும் பிள்ளாய் பாகவதனே! நான் நெடுநாளாக ஆகாரம் ஒன்றும் இல்லாமல் மிகுந்த பசியோடும் கூடி இருக்கிற வேளையில், நீ எனக்கு நல்லவனாக, நல்ல வடிவன் ஆக, ரூபன் ஆக, ஒப்பன் ஆக, கையும் வீணையும் தாளமும் ஆகப், பிரமன் எனக்குச் சிறப்பானவராகக் காட்டினார். உன்னை இப்போதே தானே, கொன்று தின்று பசி தீர்க்கிற பிரதாபத்தைப் பாரும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஓகோ! வெருட்டாதேயும் பிள்ளாய், மேல் விழாதேயும் பிள்ளாய் ராட்சதனே! ராட்சத புங்கவனே;

ராட்சத சிரேட்டனே! உன்னைப் போல மஹா நல்லவன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல மஹா உத்தமன் இல்லை பிள்ளாய்! உன்னைப்போல் ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய்! நில்; நில்லும் பிள்ளாய் ராட்சதனே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன்; கேளும் பிள்ளாய் ராட்சதனே.

ராட்சதன் : ஆயின் சொல்; சொல்லும் பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : இன்று கௌசிக மஹா ஏகாதசி நோற்றுநின்று மெலிந்த உடல் உன் பசிக்குப் போதாது. மண்ணளந்த நம்பியை நான் வாழ்த்தி வந்தால், அதன்பின் தின்று பசி தீர்த்திரு நீ. மீறாதவன் நான் திண்ணமே.

சிந்து

ஒருவார்த்தை நான் சொல்ல உகந்து கேள்
ஏகாதசி என்றொரு நோன்புண்டு
ஒளிசேர் குருங்கையிலும் பரமபதவீடு உண்டு
நம்பியைப் பரிவாகச் சேவித்துப் பக்தர்தொழும் தாளை
வாழ்த்தியபின்
பாங்குடனே ஓடி வருவேன் உனக்கின்று பசிதீர

வசனம்

அடா! வாரும் பிள்ளாய் ராட்சதனே! ராட்சத புங்கவனே! ராட்சத சிரேஷ்டனே! உன்னைப் போல நல்லவன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல் ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய். நான் இன்று திருஏகாதசி விரதம் அனுஷ்டித்து, என் சரீரம் எல்லாம் ரத்தமாம்சங்கள் இன்றியே எலும்பும் தோலுமாக நின்றது. இப்போது, நான் போய் சுவாமி அழகிய நம்பியைச் சேவித்து, சாகர விரதமான திருவேகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்பி உன் இடத்தில் நான் வந்தால், என் சரீரம் எல்லாம் ரத்த மாம்சங்களாகும்கூடி, மஹா பரிபூர்ணமாகக் கொண்டிருக்கும். அப்போது உன் இச்சைக்கு ஈடாக உன் சாத்திரத்தின் படியே, என்னைப் பசி தீர்த்துக் கொள்ளும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஆனால் சொல்லும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் :

பாடல்

போவானாம் நம்பி தன்னைப் போற்றுவனாம் மீள என்பால்
வருவானாம் பொய்யென்று அறியானாம்
மேவுகின்ற வெம்புலியை விட்டு அகன்று மீள
வருமோ பசுவும் வம்புரைத்தாய் நீ மதியாமல்

வசனம்

வாரும் பிள்ளாய் பாகவதனே! ஒரு புலியானதன் கையிலே ஒரு பசுவானது வந்து அகப்பட்டதே உண்டானால், "வாராய் புலியே! புலியே! என் கன்றுக்கு ஊட்டம் கொடுத்துத் திரும்பி வருகிறேன் என்றால், அந்தப் புலியானது விட்டு தன் கன்றுக்கு ஊட்டம் கொடுத்துத் திரும்பி வந்தாச்சோ? அந்தப் புலிக்குப் பசி தீர்ந்தாச்சோ? அத்தன்மை போல நான் உன்னை விட்டதாச்சோ? நீ போய்ப் பிழைத்தாச்சோ? எனக்குப் பசி தீர்ந்தாச்சோ? இப்போதே, உன்னைக் கொன்று தின்று பசி தீர்க்கிற பிரதாபத்தைப் பாரும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஓகோ! வெருட்டாதேயும் பிள்ளாய். மேலே விழாதேயும் பிள்ளாய் ராட்சதனே! ராட்சத புங்கவனே! ராட்சத சிரேஷ்டனே! உம்மைப் போல மஹா நல்லவன் இல்லை பிள்ளாய். உன்னைப் போல மஹா உத்தமன் இல்லை பிள்ளாய். உன்னைப் போல ஒரு சொல் வாசகனும் இல்லை பிள்ளாய்! பொறு பிள்ளாய் ராட்சதனே! நான் ஒரு உண்மை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! உண்மை அறிவு உண்டானால் நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஆனால் சொல்; சொல்லும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் :

சிந்து

நீசொன்ன வார்த்தை உன் சாதிக்கு ஈடாக நிறம்பெற்றதே
பாடுவான்

வாய்சொன்ன வார்த்தைகேள்! பூதமே நான்!
சற்றும் வஞ்சகம் பேசேன் காண்; வஞ்சகம் பேசேன்
என்றுரைத்தாயே!

மதியாமே என் முன்னே நீ இப்போ,
அஞ்சி ஒளித்தஎலி பூனைமுன் அறிவுடன் வருமோ?

வசனம்

வாரும் பிள்ளாய் பாகவதனே! அஞ்சி ஒளித்த எலியானது பூனை இடத்தே அறிவுடனே வருமோ? அத்தன்மை போல நீ சொல்கிற வார்த்தை உன் சாதிக்கு ஈடாக இருந்தது பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : வாராய் ராட்சதனே! என் சாதி இதுவே ஆனாலும் நான் பொய் சொல்கிறவனல்ல. நான்தான் பொய் சொல்லவேணும் என்றாலும், என்னுடைய சுபாவம் பொய் சொல்ல அறியாது பிள்ளாய் ராட்சதனே! ராட்சத புங்கவனே! ராட்சத சிரேஷ்டனே; உன்னைப் போல் மஹா நல்லவன் இல்லை பிள்ளாய். உன்னைப் போல மகா உத்தமன் இல்லை பிள்ளாய். இப்போது நான் போய்ச் சுவாமியாகிய நம்பியைச் சேவித்து என் சாகர* விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்பி வருகிறோம் என்று சில சத்தியம் சொல்லித் தருகிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! இந்தக் காலத்திலே, இந்தப் பூலோகத்திலே சத்தியம் வழங்குவதோ? அசத்தியம் வழங்கயிலே சத்தியம் வழங்குவதோ?

பாகவதன் : அப்படி ஏன் சொல்ல வேண்டும்? சத்தியம் உண்டான படியாலே, திங்கள் மும்மாரியும் உதய அஷ்டமனமும் உண்டாயிருக்குது. சத்தியம் இல்லாது போனால், உதய அஷ்டமனமும் திங்கள் மும்மாரியும் இல்லையே, பிள்ளாய்! அத்தன்மை போல நான் போய் சுவாமி ஆகிய நம்பியைச் சேவித்துச் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்பி வருகிறேன் என்று சிறிது சத்தியம் சொல்லித் தருகிறேன். கேளும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : ஆனாலும் சொல்; சொல்லும் பிள்ளாய் உன் வாய்க்கு வந்ததெல்லாம்.

---

* ஜாக்ர என்பது சாகர என்று ஓலிக்கப்பட்டுள்ளது
பொருள்: விழித்திருப்பதாகும்

பாகவதன் :

பாடல்

சத்யம் அளித்தோர் பூமியைக் கொடுத்துத் தாவென
மீளவே பறித்தோரும்
தெத்தமே பண்ணி அது கொடாதிருந்தோரும் ரூபமாதினைச்
சோந்தவளையே பழித்தோரும்
துத்தமாம் நரகம் அடைவர் துணிவுடன் மீள உன்முன்
வந்திலன் ஆகில்

சிந்து

பரந்தாம நம்பி குறுங்குடியான் முன்னே பாடிவிட்டுப்
பரிபூரணமாக வந்து உன் பசி தீரேனாகில்
விருந்தோடிருந்த மெய் வாடவே போசனம் செய்யாமல்
வீட்டுள்ளே உண்டவன் பாவம் எனக்காகும் கண்டாயே.

வசனம்

வாரும் பிள்ளாய் ராட்சதனே! எவனொருவன் பூமியைத் தானம் பண்ணிப் பறித்துக் கொள்கிறானோ அவனுக்கு ஒரு பாவம் உண்டே; அவன் பாவத்தை நான் அடைந்தவன் ஆகிறேன். நான் போய்ச் சுவாமி அழகிய நம்பியைச் சேவித்து என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன்முன் வந்திலேனாகில்.

ராட்சதன் : அடா! வாரும் பிள்ளாய்! பாகவதனே! பூமியைத் தானம் பண்ணித் திரும்பப் பறித்துக் கொண்டானாகில், அந்த தோஷத்தில் அவன் போனான்? அது உனக்கேது? நமக்கேது? பிள்ளாய்!

பாகவதன் : அதுவும் அல்லாதே ஒருவனுக்கு ஒரு வஸ்துவைக் கொடுக்கிறோம் என்று வாக்குத் தத்தம் பண்ணி, 'இல்லை போ!' என்று சொல்கிறவன் எவன் ஒருவன், – அவனுக்கு ஒரு பாவம் உண்டு; அவன் பாவத்தை அடைந்தவனாகிறேன். நான் போய் சுவாமி அழகிய நம்பியைச் சேவித்து, என் சாகரவிரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன் முன் வந்திலேன் ஆகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! ஒரு மனது வந்து அவனுக்குக் கொடுத்தான் ஒரு மனது வந்து திரும்ப இல்லை என்றான். அது உனக்கேது? நமக்கேது பிள்ளாய்!

பாகவதன் : அதுவும் அல்லாதே, ஒருவன் இரண்டு ஸ்திரியை விவாகம் பண்ணி ஒருத்தியை அபேட்சித்து ஒருத்தியை

உபேட்சிக்கிறானோ அவனுக்கு ஒரு பாவமுண்டே! அந்த பாவத்தை அடைந்தவனாகிறேன் நான். நான் போய்ச் சுவாமியாகிய அழகிய நம்பியைச் சேவித்து என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்பி உன் முன் வந்திலேனாகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! ஒருத்தி பேரிலே மனது இருந்தபடியாலே அவளை அபேட்சிக்கிறான். ஒருத்தி பேரிலே மனது இல்லாதபடியாலே அவளை உபேட்சிக்கிறான். அது உனக்கேது? நமக்கேது பிள்ளாய் பாகவனே!

பாகவதன் : அதுவும் அல்லாதே ஒருவன் ரூப ஸ்திரியை அனுபவித்து நான்கு பேர் இருக்கிற ஆஸ்தானத்திலே தூஷிக்கிறானோ, எவன் ஒருவன், அவனுக்கொரு பாவ முண்டே! அந்த பாவத்தை அடைந்தவனாகிறேன், நான் போய், சுவாமி அழகிய நம்பியை சேவித்து, என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன்முன் வந்திலேனாகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! ரூபஸ்திரீ என்று பாராமல் அனுபவித்து நான்கு பேர் இருக்கிற ஆஸ்தானத்திலே, தூஷித்தானாகில், அந்த தோஷந்தனிலே அவன் போனான். அது உனக்கேது? நமக்கேது பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : அதுவும் அல்லாதே. தனக்குப் பந்து ஆனவன் கிரகத்திலே வந்தால் தனக்கு நான்கு கறியும் வந்த விருந்துக்கு இரண்டு கறியும் ஆக, இப்படிப் பாகம் பண்ணி அசனம் கொடுக்கிறவன் எவனோ, அவனுக்கு ஓர் பாவமுண்டு. அந்த பாவத்தை நான் அடைந்தவனாகிறேன். நான் போய், சுவாமியாகிய அழகியநம்பியைச் சேவித்து, என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன்முன் வந்திலேன் ஆகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! அவன் கிரஹத்துக்கு உடையவன் ஆகவும் வந்தவன் பிறத்தியான் ஆனபடியாலும் இப்படி அசனம் கொடுத்தான் அந்த தோஷத்திலே அவன் போனான். அது உனக்கு ஏது? நமக்கு ஏது? பிள்ளாய்! பாகவதனே! நல்ல நல்ல சத்தியம் சொன்னாய் பிள்ளாய். இப்போதே, நானே உன்னைக் கொன்று தின்று பசிதீர்க்கிற பிரதாபத்தைப் பாரும்! பாரும்! பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஓகோ! பொறும்! பொறும்! பிள்ளாய் ராட்சதனே! ராட்சதபுங்கவனே! ராட்சத சிரேஷ்டனே! உன்னைப் போல் நல்லவன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல் மஹா உத்தன் இல்லை பிள்ளாய்! உன்னைப்போல் ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய்! இன்னும் ஒரு சத்தியம் சொல்லித் தருகிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : ஆனால் சொல்; சொல்லும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் :

சிந்து

பூவிலச் சதுர்முகன் போற்றும் குறுங்குடி நம்பிதன்
புகழை மிகப்பாடிப் போந்து – உன்பால் வந்திலனாகில்
கோவைச் சொரிந்து, வைக்கோலைக் காட்டிக்
கொண்டுபோய்க் கொன்றவன் பாவம் எனக்காகும்.
மீளேன் ஆகில் கண்டாயே!

வசனம்

வாரும் பிள்ளாய் ராட்சதனே! ராட்சத புங்கவனே; ராட்சத சிரேஷ்டனே; உன்னைப் போல மிகு நல்லவன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல மஹா உத்தமன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல உண்மைக்கு இனியான் இல்லை பிள்ளாய் ராட்சதனே! ஆராகிலும் ஒருவன் காராம் பசு என்று பாராமல் முன்னே வைக்கோல் காட்டிக் கங்கைக் கரையிலே கூட்டிப் போய்க் கொல்கிறானோ, அவனுக்கு ஒரு பாவமுண்டே! – அவன் பாவத்தை நான் அடைந்தவன் ஆவேன். நான் போய், சுவாமி ஆகிய அழகியநம்பியைச் சேவித்து, என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன் முன் வந்திலேன் ஆகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! இந்த லோகத்துக்குள்ளே, காராம் பசுவென்றும் பாராமல், முன்னே வைக்கோலைக் காட்டிக் கங்கைக் கரையிலே கூட்டிப் போய்க் கொன்றானாகில், அவன் ஏழு பிறப்புக்கும் நரகத்திலே கிடந்து அழுந்துவான். அது உனக்கு ஏது, நமக்கு ஏது? பிள்ளாய் பாகவதனே! நல்ல நல்ல சத்தியங்கள் சொன்னாய் பிள்ளாய்! நீ சொன்ன சத்தியத்துக்கு நான் ஒரு அசத்தியம் சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஆனால் சொல்; சொல்லும் பிள்ளாய் ராட்சதனே!

பாடல்

ராட்சதன்:

வேகிற வீட்டுக்காக வெட்டுகிற கிணறு போலதாகுமே!
மிகுந்த பத்து நாளாய்த் தவிக்கிறேன்
வாகிலே வந்த உன்னை வசத்திலே தின்றிடாமல்
போகநான் உன்னை விடுவதுண்டோ? நீ புகலுமாறே.

வசனம்

வாரும் பிள்ளாய் பாகவதனே! ஒரு கிரகஸ்தன் ஆனவன், ஆயிரம் பதினாயிரம் செலவழித்து ஒரு அக்கிரகாரம் கட்டி வைத்தான். அதே அக்கிரகாரத்தில், அகோராத்திரி யிலே அக்னிப்பிரவேசம் ஆனால், அந்நேரமே கிணறு வெட்டி, வெள்ளம் கோணி முகந்துவிட்டு, அந்த அக்னியை அணைத்திட என்றால், அந்நேரம் கிணறு வெட்டியது ஆகுமோ? அக்னியை அணைத்தது ஆகுமோ? அத்தன்மை போல, நீ என் கையிலே வந்து அகப்பட்டவனை விட்டது ஆகிடுமோ? நீ போய்ப் பிழைத்தது ஆகிடுமோ? எனக்குப் பசி தீர்ந்தது ஆகிடுமோ? இப்பொழுதே நானே உன்னைக் கொன்று தீர்க்கிற நிரதாபத்தைப் பாரும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஓகோ! வெருட்டாதேயும் பிள்ளாய்! மேலே விழாதேயும் பிள்ளாய் ராட்சதனே! ராட்சத புங்கவனே! ராட்சதசிரேஷ்டனே! உன்னைப் போல் தவ நல்லவன் இல்லை பிள்ளாய். உன்னைப் போல் உத்தமன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல் ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல் உண்மைக்கு இனியான் இல்லை பிள்ளை ராட்சதனே! பொறும்; பொறும் பிள்ளாய். இன்னம் ஒரு சத்தியம் சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே.

ராட்சதன் : ஆனால் சொல்; சொல்லும் பிள்ளாய் பாகவதனே!

பாடல்

பாகவதன் :

குருதாரம், வேந்தனின் தாரம், தோழன் குலதாரம்
விரும்பினோரும்
அரிதாய சஷ்டிதனில் அஷ்டமியில் அமாவாசையில்
குளியாதிருந்தோரும்

பெரிதாய விசுவாசபாதகம் பிறங்கு சுவாமித் துரோகம்
செய்தோரும்
திருஏகாதசி தனில் அன்னத்தைப் புசித்தோர் தாமும் சே
நரகம் தானே
நானும் சேர்வன் மீள உன்முன் வந்திலேன் ஆகில்.

சிந்து

சத்தியம் அன்றி அசத்தியம் சொல்லேன் ஒரு நாளும் –
தருமனை ஒத்த ஒளியானே! – என்
வார்த்தை தனைக்கேட்பாயே.
வித்தையும் புத்தியும் வீரியமும் தந்த ஆசாரியன் – தன்
மெல்லியலாளைப் புணர்ந்த பாவம் எனக்காகும்
மீளேன் ஆகில் கண்டாயே!

வசனம்

வாரும் பிள்ளாய் ராட்சதனே! பரலோகத்துக்கு ரட்சகனாய் இருக்கும் குருவினுடைய பத்தினி என்றும் பாராமல், இகலோகத்து ரட்சகனாய் இருக்கும் ராஜாவின் பத்தினி என்றும் பாராமல், தனக்குப் பிராண பதமாய் இருக்கும் தோழனுடைய பத்தினி என்றும் பாராமல், எவன் காமக் குரோதத்துடன் இச்சிக்கிறானோ, அவனுக்கு உண்டாகும் பாவம் உண்டே – அவன் பாவத்தை நான் அடைந்தவன் ஆவேன். நான் போய் சுவாமி அழகிய நம்பியைச் சேவித்து என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன் முன் வந்திலேன் ஆகில்.

வசனம்

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! குருவின் பத்தினி என்றும் பாராமல் ராஜாவின் பத்தினி என்றும் பாராமல், தன் தோழனுடைய பத்தினி என்றும் பாராமல் இச்சித்தனாகில், அந்த தோஷத்திலே அவன் போனான். அது உனக்கு ஏது? நமக்கு ஏது? பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : அதுவும் அல்லாதே, ஸப்தமி, அஷ்டமி, அமாவாசை இத்தினங்களிலே இஷ்டமுடனே ஆற்றிலே தீர்த்தமாடி, நியம அனுஷ்டான விதிமுறைகள் செய்யாமல் அன்னத்தைப் புசிக்கும் ஒருவன் எவனோ, அவனுக்கு உண்டாகும் பாவம் உண்டே! அவன் பாவத்தை நான் அடைந்தவனாகிறேன். நான் போய்ச் சுவாமி ஆகிய அழகியநம்பியைச் சேவித்து, என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன்முன் வந்திலேன் ஆகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! சஷ்டி, ஸப்தமி, அஷ்டமி, அமாவாசை இத்தினங்களில் ஆற்றிலேயும் குளத்திலேயும் போய் தீர்த்தமாடாமல் தன் கிரகத்திலே தானே இருந்து அன்னத்தைப் புசித்தானாகில் அவன் குலத்திலே வெகு நீசனாகப் போவான். அது உனக்கேது? நமக்கேது பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : அதுவும் அல்லாதே, மந்திர உபதேசம் பண்ணிக் கொடுக்கிற ஆசாரியாருடைய ஸ்திரீயைத் தன் சீடனாய் இருக்கிறவன் இச்சிக்கிறானேயாகில் அவனுக்கு ஒரு பாவம் உண்டே! அவன் பாவத்தை நான் அடைந்தவன் ஆகிறேன். நான் போய் சுவாமி அழகியநம்பியைச் சேவித்து என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன் முன் வந்திலேனாகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! மந்திர உபதேசம் பண்ணிக்குடுக்கிற ஆசாரியருடைய ஸ்ரீபத்தினியைத் தன் சிஷனாகயிருக்கிறவன் இச்சித்தானாகில் அந்த தோஷத்திலே அவன் போனான். அது உனக்கு ஏது? நமக்கு ஏது பிள்ளாய்? பாகவதனே.

பாகவதன் : அதுவும் அல்லாதே, தர்மார்த்த காம மோட்ஷா சதுர்வேத புருஷார்பனாக. இகமும் பரமும் ரெண்டுங் குடுக்கிற திருவேகாதேசியிலே அமிர்த கணஞ்செய்யாமல் அன்னத்தைப் புசிக்கிறானே யாதாமொருவன் அவனுக் கேதொரு பாவமுண்டும். அவன் பாவத்தையடைந்தவ னாகிறேன், நான்போய் சுவாமி அழகிய நம்பியைச் சேவித்து, என் சாகர விரதமான திருவேகாதேசி விரத மும் அனுஷ்டித்துத் திரும்ப உன்முன் வந்ததிலேனாகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! பசி பொறாதவன் மாவும் தோசையும் பணியாரமும் தின்கிறான். பசி பொறாதவன் சட்டியாலேயும் பெட்டியாலேயும் சோற்றை வாரிவாரித் தின்கிறான். அந்த தோஷத்திலே அவன் போனான். அது உனக்கு ஏது? நமக்கு ஏது பிள்ளாய் பாகவதனே? நல்லநல்ல சத்தியங்கள் சொன்னாய். நீ சொன்ன சத்தியத்துக்கு நான் ஒரு அசத்தியம் சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : ஆனாலும் சொல்லும் பிள்ளாய் ராட்சதனே!

சிந்து

ராட்சதன் :

இந்தச் சத்தியங்கள் எல்லாம் – என் எதிரிலே நின்று – நீ வந்து –
பேசி இசையவே மழுப்பினால் விடுவேனோ?

சந்து கைகால் வேறதாக – தனித்தனியே பிச்சுத் தின்று
உந்தன் உதிரம் குடிப்பேன் – உதறுவேன் எலும்பெல்லாம்.

வசனம்

வாரும் பிள்ளாய் பாகவதனே! உனக்குப் பரந்ததேசம் ஒழித்து வேறு தேசம் இல்லையோ?

உனக்கு இந்த ஊர் ஒழிந்து வேறு ஊர் இல்லையோ?

உனக்கு இந்த வழி ஒழிந்து வேறு வழி இல்லையோ?

என் முன்னே சற்றும் பயப்படாமல் நின்று கொண்டு சில சட்டி என்றும் சில பெட்டி என்றும் சில போகிறேன் என்றும், சில வருகிறேன் என்றும் சொல்கிறாயே! நான் இந்தக் கையை இங்ஙனே எடுத்தேனாகில், எறும்பு முதல் யானை வரை எண்பத்துநான்கு நாலாயிரம் கோடி ஜீவன்களையும் இங்ஙனே பட்சித்துப் போடுவேன். நான் இந்தக் கையை இங்ஙனே எடுத்தேன் ஆகில், ஈரேழு பதினாலு லோகமும் வேரோடு பிடுங்கி ஏழு சமுத்திரத்துக்கு அப்பாலே எறிந்து போடுவேன். அப்படிக் கொத்த பராக்கிரமன் முன்னே நீ வந்து அகப்பட்டதே உண்டானால், எப்படி உன்னைப் பட்சிப்பேன் என்றால் உன் கால் வேறு, உன் கை வேறு, உன் சந்து வேறு, உன் சதை வேறு, அவய அவயங்கள் தோறும் பிச்சுப் பிடுங்கி, உன்னுடைய ரத்தத்திலே, தேவ ஆராதனையும் பண்ணி, உன்னை இப்பொழுதே கொன்று, தின்று, பசி தீர்க்கிற பிரதாபத்தைப் பாரும். பாரும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஓகோ! வெருட்டாதேயும் பிள்ளாய்! மேலே வினாதேயும் பிள்ளாய்! ராட்சதனே! ராட்சதபுங்கவனே! ராட்சதசிரேஷ்டனே! உன்னைப் போல வெகு நல்லவன் இல்லை. உன்னைப் போல மகா உத்தமன் இல்லை. உன்னைப் போல ஒரு சொல் வாசகன் இல்லை பிள்ளாய்! உன்னைப் போல உண்மைக்கு இனியவன் இல்லை பிள்ளாய். ராட்சதனே! பொறு; பொறும் பிள்ளாய்! அந்தச் சத்தியங்களைப் போல் அல்லாமல், உண்மைக்கு உத்திரம் ஆக ஒரு சத்தியம் சொல்கிறேன். அந்தச் சத்தியத்தைக் கேட்டுவிட்டால் ஆகட்டும். விடாதே போனால், உன் இச்சைக்கு ஈடாக, உன் சாத்திரத்தின்படியே, என்னைப் பட்சித்துக்கொள்ளும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : ஆனால் சொல்; சொல்லும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : தருமநெறி ஒன்றையும் கேள்; வல்லரக்கா! சத்தியமும் இதுவே ஆகும். திருமகட்கும் புலிமகட்கும்சேர்

பெருமாள் தேவர் போற்றும், அரி முதல் நாராயணர், அயனுக்கும் பரதேவர். இவர் என உரைப்போரும் கர்ம காரணனாய், முகிழ்ந்த பிரபத்திபரனாய், எள்ளுக்குள் எண்ணெய் போலவும் அந்தந்த மலர்களுக்கு அதிமணம் போலவும் திருமகளுக்கும் புவிமகளுக்கும் பிரானாய். நாயகன் ஆன ஸ்ரீமந் நாராயணனையும் அவராலே சிருஷ்டிக்கப்பட்ட எதிர் எதிர் தேவதைகளையும் இப்படி சமனாக புத்தி பண்ணுகிறான் எவனொருவனே, அவனுக்கு ஒரு பாவமுண்டே? அவன் பாவத்தை நான் அடைந்து, அவனைப் போல நித்திய சம்சாரி ஆகக் கடவேன். நான் போய் சுவாமியாகிய நம்பியைச் சேவித்து, என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன் முன் வந்திலேன் ஆகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! அரி! அரி! ராம! ராம! அரிஅரி நாராயணா! நீயும் கொடுமையான சத்தியம் சொல்ல வந்ததாயின் இன்னம் ஒருதரம் அந்தச் சத்தியத்தைச் சொல்லும் பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : ஆனாலும் சொல்கிறேன், கேளும் பிள்ளாய் ராட்சதனே! எறும்பு முதல் யானை வரை பத்து நான்கு நூறாயிரம் கோடி ஜீவாத்மாக்களுக்கும் அந்தந்த மலர்களுக்கும் அதிமணம் போலே, எள்ளுக்குள் எண்ணெய் போலவும் எழுந்தருளி இருக்கிற ஸ்ரீமந் நாராயணனையும் அவராலே சிருஷ்டிக்கப்பட்ட எதிர் எதிர் தேவதைகளையும் சமனாகப் பக்தி பண்ணுகிறான் எவனோ அவனுக்கு ஒரு பாவம் உண்டே! – அவன் பாவத்தை நான் அடைந்து அவனைப் போல நித்திய சம்சாரியாகக் கடவேன். நான் போய் சுவாமி ஆகிய நம்பியைச் சேவித்து என் சாகர விரதமான திருஏகாதசி விரதமும் அனுஷ்டித்துத் திரும்ப உன் முன் வந்திலேன் ஆகில்.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதனே! இந்தக் கொடுமையான சத்தியம் சொல்ல வந்தாயே! நான் கண்டதுமில்லை; கேட்டதும் இல்லை. நீயும் பக்தி முற்றி வைராக்கியம் ஆகவல்லவோ இந்தக் கொடுமையான சத்தியம் சொல்ல வந்தாய்! பிள்ளாய்! இந்தப் படிக்கு நீ போய்ச் சுவாமியாகிய நம்பியைச் சேவித்து உன் சாகரவிரதமான திருஏகாதசி விரதம் அனுஷ்டித்துத் திரும்ப என்னிடத்திலே வாரும்பிள்ளாய்! நீ வரும் அளவும் உன் வரவு பார்த்துக்கொண்டு இவ்விடத்தில் பிற்கிறோம் பிள்ளாய். அதுவும் அல்லாதே ராத்திரி நான்கு சாமம் உண்டு. அதிலே முதல் சாமம் மனிதர் சாமமாகக் கொண்டிருக்கும்.

இரண்டாம் சாமம் தேவர்கள் சாமம் ஆகக் கொண்டிருக்கும். மூன்றாம் சாமம் ராட்சதர் சாமம் ஆகக் கொண்டிருக்கும். நான்காம் சாமம் ரிசி சுரர் சாமம் ஆகக் கொண்டிருக்கும். அதிலே மூன்றாம் சாமம் ராட்சதர் சாமம் அறிந்து அதி சீக்கிரத்திலே வாரும் பிள்ளாய்! நீ வரும் அளவும் உன் வரவு பார்த்துக்கொண்டு இவ்விடத்திலே நிற்கிறோம் பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : வாரும் பிள்ளாய் ராட்சதனே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : ஆனால் சொல்; சொல்லும் பிள்ளாய் பாகவதனே!

சிந்து

பாகவதன் :

நீயே மாதாவும், பிதாவும் நீயே என்றும்
நீயே குருவும், நீயே நான் செய் தவமும்
நீயே முற்றும் நீயே எனக்கு நம்பி.

வசனம்

வாரும் பிள்ளாய் ராட்சதனே! உன்னுடைய கோபமும் பசியும் அடக்கி, என்னைச் சுவாமியாகிய நம்பியைச் சேவிக்க விட்டாயே? நீயே எனக்கு மாதாவும், நிதாவும், குருவும், தெய்வமும், வண்ணம் அழகிய நம்பியும் வடிவழகிய நம்பியும் நீயே அல்லாமல் எனக்கு வேறு ஒருவரும் இல்லை, பிள்ளாய்! ராட்சதனே! இன்னம் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே!

வெண்பா

நள்ளிருளிலே வந்து என்னை நாலாறு நாழிகையாய்
உள்ளம் மருள உரைசெய்தாய் நீ–எள்ளும்
அபகாரம் செய்யா வல்லரக்கா நீ செய்த
உபகாரம் நான் மறவனே காண்.

வசனம்

வாரும் பிள்ளாய் ராட்சதனே! நான் இன்று திருஏகாதசி விரதம் அனுஷ்டித்துக் கையும் வீணையும் தாளமுமாகப் பாடிக்கொண்டு சுவாமி அழகியநம்பியைச் சேவிக்க வருகிற பொழுது, நீ இந்த அர்த்த ராத்திரி பாதி நேரம், அத்துவானக் காட்டுக்குள்ளே முகில் போல மேனியும், பிறை போல

எயிறுமாக நின்று நிலம் அதிர ஓடி, மகா நெட்டூரமாக அலறி, இரு கண்கள் நெருப்பு ஒப்ப, வெருட்டி, மேலே விழுந்து, பிச்சுப் பிடுங்கித் தின்கிறோம் என்று வந்தவன், நான் சொன்ன உண்மையைக் கேட்டு, சுவாமியாகிய நம்பியைச் சேவிக்கப் போகவிட்டாயே! நீ இந்த உபகாரம் செய்தவனுக்கு, நான் பிரதி உபகாரம் செய்யாமல் இருப்பேனோ? நான் வரும் அளவும் என் வரவு பார்த்துக் கொண்டு இவ்விடத்திலே நில்லும் பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : ஆகவே மகா சந்தோஷம் ஆயிற்று. போய் வாரும் பிள்ளாய்! பாகவதனே!

சிந்து

வம்பார் சோலை சூழும் வண்குருங்காபுரி –
நம்பியைச் சேவிக்க – நடந்தானே பாகவதன்

கலித்துறை

விருப்பார்க்கு அயல் அக்கண்ணி ஐந்தே; கொடிக்கம்பம் மேருஎன
பொருப்பாற் கடலும் சித்திர கோபுர வாசலும் பொன்மதிலும்
கருப் பாற்கடலும் கழுநீரும் சந்தனக் காவும் நம்பி
திருப் பாற்கடலும் குருங்காபுரியும் தெரிகின்றதே!

சிந்து

செந்தமிழ்க் குருங்கையில் நகர் –
நகர்தன்னை நோக்கியே –
திருமணி வடம் மார்பில் சிறந்திலங்க –
அந்தமில் அத்திருமண் விளங்கதிடத்தாள வீணையுடனே
அழகிய பாகவதன் நடந்தனனே!

கலித்துறை

அப்பைப் நிளந்து அலை ஆளிக்கட்டி அடுக்கு, ஆகாயத்துத்
தர்ப்பத்தின் தூவியும் தேர் அலங்காரமும் தெருவீதிஎல்லாம்
கொப்பத்தம நதி குதிபாயும் சோலைக்குருங்கை நம்பி
தெப்பக் குளமும் திருக்கோபுர வாசலும் தெரிகின்றதே.

சிந்து

மாதுசலதியும், பாதிமதியமுராரி – மதன்றும் உரைசெய்ய
மோகம் மிகமிக ஆகியே
முதலானவர் குருங்கை முராரியே! மாது வளர்திருமார்பனே!
மரமேழும் விளவெய்த மாயனே!
மண்ணை அளந்தருள் வாமனனே–குருங்கை வண்ணம்
அழகிய நம்பியே! தேடும் மாநிதியே!

குருங்கையில் செய்ய தாமரைக் கண்ணனே! கோடி
தூர்யப் பிரகாசனே அழகிய நம்பியே!
மாட மாளிகைக்குள் குறுங்குடி வாழும் பேரருளாளனார்–
ஏட விழும் மதி மாலை மார்பன் எங்கள் சடகோபன் தம்பிரான்
காலமுகில் என நீளும் வடிவொடு காளியன் முடியடு பாதனே;
ஏனை அடியவர் பாவ வினைதவிர்த்தின்ப வீடருள் குளகனே!
கோனை ராவணன் வாகில வான பின், கூடிப் போர் செய்ய
இன்று போய் நாளை வா எனும் அருளாளனே!
குருங்கை நண்ணும் அழகிய நம்பியே!
சரணம்! சரணம்! நாராயணனே! சரணம்! சரணம்!
நாதா புவீதா சரணம்! சரணம்!
ஸ்ரீநிவாஸா சரணம்! சரணம்!
திருவாழ்மார்பா! சரணம்! சரணம்!
காரா வடிவா! சரணம்! சரணம்! கருணாகரனே! சரணம்! சரணம்!
ஆவா அமுதே! சரணம்! சரணம்! அழகிய நம்பியே சரணம்!
சரணம்!

அடியேன் மாதங்கன் சேவிக்கிறேன் சுவாமி!
பரமபத வாசா! பரிபூரண நாயகா!
பக்தி தாசன் பிரியா! ஸ்ரீகுருங்க நிவாஸா!
ஸ்ரீவைகுண்ட நிவாஸா!
மகேந்திரகிரி பர்வத சாய்கை சிந்து நதிக்கரை
இருக்கிற வடிவழகிய நம்பியை
அடியேன் மாதங்கன் கைவார
விண்ணப்பம் செய்து சேவிக்கிறேன்.
சுவாமி! பராக்! பராக்!

தேவதேவா! அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா!
தேவ தேவேசா! வேத வேதாந்த வித்தகா!
தேவ தேவோத்தம புராண புருஷோத்தமா!
தேவ தேவ சர்வபௌமா! புரந்தர வந்திதா!
தேவ கபடநாடக தூத்ராவதார! கருடத்வஜா!
அகணித மணிமார்பா! அவதாரா! பட்சேந்திரவாகனா!
ஆபத் ஸஹாயா! ஸகல கல்யாண குணா நிதே!
அஹல்யா சாப விமோசனா! ஸகல கல்யாண குணா நிதே!
ஆசரித சரணாகத ஸ்வரூபா! கோதண்ட தீட்சாமந்தா!
காருண்யவரதா! தசரத ராஜ நந்தனா!
புக்தி முக்தி பல தாயகா! கௌஸல்யா புத்ர ரத்னாகர சோமா!
சங்கு சக்கர கதாதரா! பரதார்க்கரசே!
லக்ஷ்மணர்க் கரசே! லக்ஷ்மி கௌஸ்துப திவ்யாபரண பூவதா!
சத்ருக்கனர்க்கரசே! மாலா அலங்கருத சேகரா!
லக்ஷ்மீ வல்லவா! – லக்ஷ்மி குச குங்கும பங்காங்கித
பக்ஷத்திலகா!
லக்ஷ்மீ நிவாஸா! – துளசி மாலா அலங்கருத சேகரா!
லக்ஷ்மீ குலதிலகா! – விச்வா மித்ர யக்ஞய பரிபாலனா!
தூய வம்ச ப்ரதீபகா! – யக்ஞய கர்த்தா!
தாடகப் ப்ராணா பகரா! – யக்ஞய போக்தா!

சுபாகுச்சிரச்சேதன! அகலிகா விமோசன பாதார விந்தா!
மிதிலாப் ப்ரவேசா – பரசுராம கர்வ பங்கா!
ஜனகத் தனுவளைத்தவா! – ஸ்ரீராமா! அயோத்தியா ப்ரவேசா!
சீதா பாணிக்கிரகா! – கைகேசிப் பிரிய காரணா!
மைதிலி வல்லபா! – பிதுர்வாக்ய பரிபாலனா!
கங்கா நதி தீர வாஸா! – அகஸ்திய ஆச்ரம ப்ரவேசா!
சித்ரகூட ப்ரவேசா! – பஞ்சவடீதீர வாஸா
விராத ஸம்ஹாரா! – தூர்ப்பணகா நாஸிகா சிரத் தேசனர்!
மாரீச மிருக ஸம்ஹாரா! – பம்பா நதி தீர வாஸா!
ஜடாயு மோக்ஷ பாதாரவிந்தா! – திருவடி சேவித்த சரணார விந்தா!
கபந்த பாஹூ கண்டன! – சுக்ரீவ அனுக்கிரஹா
வாலி நிக்ரஹா! – ராவணாந்தகா!
சமுத்ர பந்தனா! – ராவண கும்பகர்ண ராக்ஷஸ பிரளயாந்தகா!
லங்காப் பிரவேசா! – லங்கா ராஜ்ய விபீஷண பட்டாபிஷேகா!
புஷ்பகவிமானாதிரூட – ஸ்ரீமத் அயோத்யா பட்டாபிஷேகா:
சேது மோக்ஷப் பிரதானா! – கங்கு சமர்த்தனா!
நந்திகிராம பிரவேசா! – சிசுபால சமர்த்தனா!
அனந்தசயனா! – யசோதா நந்தன!
வடபத்ர சயனா! – வாசுதேவ நந்தன!
சீதாபதிசயனா! – தேவகீ நந்தன!
நந்த நந்தனா! – அக்ரூர வரதா!
அம்பரீஷ வரதா! – தேவ நாத கீதப் பிரியா!
கஜேந்திர வரதா! – வேணு நாத கீதப்பிரியா!
ப்ரஹ்லாத வரதா! – ஸாம வேத கான ப்ரியா!
திரோபதை மான ரக்ஷக! – சிந்து நதி தீரவாஸா!
குருங்க நிவாஸா! – ரகுவீர! அக்ஷடாவதானா!
தேவ ராஜா! – தேவ சிகாமணி!

சிந்து

எங்கள் குறுங்குடி முகிலே சரணம் – சங்கணி செங்கைகைக்
குழகா சரணம்
எழில் அரி அரிய பிரானே சரணம் – சதுர்முகன் தொழுதிடும்
தாஸா சரணம்.
பொங்களபத்திரு மார்பா! சரணம் – நம்கலி தீர்க்கும் நம்பி
சரணம்
புவிமகள் மருவிய புயலே சரணம் – நாத வினோதனே
சரணம்! சரணம்.

இனி, கைவாரம்

அலகை முலை உண்டவா!–உலகினை
உண்டுமிழ்த்தவா!
ஆழ்வார்கள் நாயகா! – ஊமையைப்பாட வைத்தவா!
இரணியனை வென்றவா! – எள்ளிலும் புகுந்தவா!
ஈரேழு உலகம் முழுதும் ஓரடி அளந்தவா! – ஏனம்
உருவானவா!

ஐவர்கள் சகாயா!–கஞ்சனை வதைத்தவா!
ஒண்ணுதலார் புணர் மணி மார்பா! – காசினி
அளந்தவா!
ஓங்காரத்துள் உணர்ந்தவா! – கிளிமொழியார்
புணர்மணி மார்பா!
ஔவியம் மனத்துறை யாதவா!–கீதம் உகக்கும்
முகுந்தா!
குன்றினை எடுத்தவா!–கைகேசிபிரிய காரணா!
கூனி சொல்லுக்கு உகந்தாவா!–கொண்டல் நிற
வண்ணா
கஜமுகன் சென்றவா! – கோசிகன் நின் நடத்தவா!
கேசவ! மதுசூதனா! – கோசலை கண்மணி ஆனவா!
ஜனகன் தனுஒடித்தவா! – சுரர்தொழும் பாதா!
ஜானகிகைப் பிடித்தவா! – சூடிக்கொடுத்தவள்
நேயா!
கிம்புள் வாய் கிழித்தவா! – செம் பதுமின்சேர் மதி
மார்பா!
சீய உரு ஆனவா!–சேடன் மிசைத்து துயின்றவா!
சொல் தமிழுக்கு உகந்தவா! – தினகர் தொழும்
பாதா!
சோதி நிறைந்தவா!–தீங்கிலாப் பொருள் ஆனவா!
தசரத குமாரா! – துளப நிறை யார் அணி மார்பா!
தாடகியை வதைத்தவா! – தூண்டு முனியை
ஜயித்தவா!
தேவர்கண நாயகா! – நயினார் அரவிந்த!
தேவ சிகாமணி! – நாவீர! சொற்குகந்தவா!
தொண்டர்க்கு அருள்சார்ந்தவா! – நிலமகள்
பாடலுக்கு உகந்தவா!
தோழமைக்கு உகந்தவா! – நீசமில் பாடலுக்குக்கந்து
ஆபரணம் கொடுத்தவா!
நூற்றுவரை ஜயித்தவா! – நோக்கி வந்த
விபீஷணர்க்கு அரசு அளித்தவா!
நெற்றிக்கண்ணை இடத்தில் வைத்தா! – பரம
பதவாசா!
நேமி தரித்தவா! – பாவாணர்பின் பணிப்பாய்
சுருட்டி நடந்தவா!
பிதுர் மார்க்கண்ட சேவை பிரியாதவா; –
பெண்ணை ஆணாக்க வல்லவா!
பீதக ஆடை புனைந்தவா! – பேரருளாளா!

புனகிதகளப முலையார் அணி மார்பா! –
பொற்சிலை தரித்தவா!
பூசுரர் குலம் காத்தவா! – போர் மதனை வென்றவா!
மகர குண்டலா! – முகில் நிறவண்ணா!
மானின் பின் போனவா! – மூவுல் களந்தவா!
மிதிலை வில் ஒடித்தவா! – மெல்லிய நல்லாள்
புணர்மதி மார்பா!
மீன் உரு ஆனவனே! – மீமிசைக்கு உகந்தவா!
மொய்குழலார் சாபம் தவிர்த்தவா! –
விஞ்சையர் தொழும் பாதா!
பொக்கிஷ கந்தா! – வீர ராகவா!
வஞ்சக மனத்துறையாதவா! – உம்பர்
தொழும் பாதா!
வாலியை வதைத்தவா! – ஓர் சகடுதைத்தவா!
வெஞ்சின அரக்கரை ஜயித்தவா! – மச்சா வதாரா!
வேழம் முன் சென்றவா! – கூர்மா வதாரா!
வொம்பரிபவாய் கிழித்தவா! – வராஹா வதாரா!
ஓண நன் நாளினாய்! – நரசிம்மா வதாரா!
வாமனை வதாரா! – கிருஷ்ணா வதாரா!
பரசுராமா வதாரா! – கல்கி அவதாரா!
தசரதராமாவதாரா! – பலபத்ர ராமா வதாரா!

நாழீந்தே! நாழீத்தே!

சிந்து

மீனத்திருவுரு வானாய் சரணம் – ஞானப்பரசு ராமா சரணம்
வெற்பொடு கூர்மம் ஆனாய் சரணம் – நலமிகு தசரத ராமா
சரணம்
ஏனத்திரு அவதாரா சரணம்–வானா! பலபத்ர கிருஷ்ணா
சரணம்
இயல அரிய பிரானே சரணம் – வரி பரி ஆகிய நம்பீ சரணம்.

இனி, கைவாரம்

சோலையும் மாலையும் அழகிய பெருமாள் –
அழகும் ஆன்மையும் உடைய பெருமாள்
சேவித்தோரை வாழ்விக்கும் பெருமாள் –
நடையும் உடையும் அழகிய பெருமாள்
செல்வமும் கல்வியும் கொடுக்கும் பெருமாள் –
நாவீரன் சொற்கு உலகளந்த பெருமாள்
ஆபரணங்கள் கொடுக்கும் பெருமாள் –
வைத்த இமை மாறாத பெருமாள்

படிஏற்றம் அழகிய பெருமாள் –
முன்னிலும் பின்னும் அழகிய பெருமாள்
பரிஏற்றம் அழகிய பெருமாள் –
முக்கண்ணன் சாபம் தவிர்த்த பெருமாள்
முத்திரைக்கையும் முகமும் அழகிய பெருமாள் –
முனிவரர் அறியாத பெருமாள்.

முறுக்கு ஒலியலும் முகமும் அழகிய பெருமாள்–
ஆடரவில் ஆடியபெருமாள்
ஆலிலையில் துயின்ற பெருமாள் – அண்டம் நிமிர
வளர்ந்த பெருமாள்
அடியவர் ஜன்ம பரிபாலனப் பெருமாள் –
பாடுவார்க்கு இனிய பெருமாள்
அமரர்க்கு அமுதம் அளித்த பெருமாள் –
பாடவல்ல பெருமாள்
வெள்ளைப் பரியில் ஏறும் பெருமாள் – கஸ்தூரி
நாம அழகிய பெருமாள்
கருணை குடிகொண்டர் பெருமாள் – பேய்ச்சி முலை
பிசைந்து அமுதம் உண்ட பெருமாள்
ஆகாதாரை ஆகச் செய்யும் பெருமாள் – சகடினை
உதைத்த பெருமாள்
அடியவர் மனத்து உறையும் பெருமாள் – மஞ்சினை
இடந்த பெருமாள்
வெண்ணெய்க்கு ஆடும் பெருமாள் – கன்றினை
எறிந்த பெருமாள்
பரிவாய் இழித்த பெருமாள் – வேயூதும் பெருமாள்
புள்வாய் கிழித்த பெருமாள் – வரையினைக்
குடையாய் எடுத்த பெருமாள்
ஆடரவில் நடித்தபெருமாள் – ஞானம் தன்னை
அளிக்கும் பெருமாள்
ஆலிலையில் துயின்ற பெருமாள் – ஒலிஅலை
பறித்து ஒடுக்கும் பெருமாள்
சுகந்தம் அணிந்தபெருமாள் – இன்னிசை அறியும்
பெருமாள்
வாரணக் கோட்டினை ஒடித்த பெருமாள் – இயல்
இசை அறியும் பெருமாள்
கஞ்சனை வதைத்த பெருமாள் – இலங்கை வழிகண்ட
பெருமாள்
காசினி அளந்த பெருமாள் – ராம வேட்டை ஆடும்
பெருமாள்

கடல் அதிரபொடி படத் திருக்கண் சிவந்த
பெருமாள்
ஏழுபடி காலம் பிழை செய்தாலும் அடியார்
அளவிலே ஏதும் அறியாத பெருமாள்

நாழீந்தே! நாழீந்தே! தேவா!

சிந்து

பம்பிடென அரைமதி தண்டைகள் கலீரென –
பங்கய மலரடி குந்தி மிக நிமிரவே –
பண்டியுள் நிறைய மன அங்கையில் வழிந்திடப் –
பண்புடன் உறிவெண்ணெய் கண்டருள் பரமனே!

அம்புவிபுகழ் சிவசங்கரன் அறுமுகன்
அன்புடன் துதிசெய்யும் இந்திரர் தொழுநனே – அழகிய நம்பியே!
அம்புய மலரடி தந்தெனை அடிமைகொள் – குறுங்குடி நம்பியே

இனி, கைவாரம்

அண்டர்கள் பரவிடும் நம்பியே – நாத வினோத
நம்பி
நித்தம்புதிய நம்பி! – வளத்தரு வாழ்வித்த நம்பி
நீண்ட பொன்மேனி நம்பி! – அனைத்து அடிமை
கொண்ட நம்பி
மஞ்சனம் அழகிய நம்பி! – பண்ணாரப்பாடும்
பரவசம் கொடுத்த நம்பி
வடிவழகிய நம்பி! – நாக்கறுக்க நாக்கு அளித்த நம்பி
நாவீரன் சொற்கு உகந்த நம்பி – திருமங்கை
ஆழ்வாரை அடிமைகொண்ட நம்பி
என்னை அடிமை கொண்ட நம்பி – அன்னமாய்
வேதத்தை நான்முகனுக்கு அருள் செய்த நம்பி
பாடுவார்க்கு இனிய நம்பி – அழகிய நயன நம்பி
பாமாவை சூடும் நம்பி – செல்வளைப்பு அளித்த
திருமேனி நம்பி
பல்லாயிரம் கோடி அண்டத்தை உண்டுமிழ்ந்த
நம்பி! – பேரருராளா நம்பி
ஈரேழ் உலக முழுதும் ஓரடியாய் அளந்த நம்பி –
செங்கனி வாய் நம்பி
ஈசனை இடத்தில் வைத்த நம்பி – வானவர் இடர்
தீர்த்த நம்பி
பங்கயத்தோனை ஈன்றருள் நம்பி! –
நாழீந்தே! நாழீந்தே! தேவா!

சிந்து

ஞாலத்தில் உள்ளவான ஜனனம்–எந்நாளும் வாழ்க!
இந்நேரமே!
நாம்பதம்பெற அன்புடன்–சரணம் புரிந்தெனை ஆளுவாய்!
ஆலினஇலை அலைஆழிமிசை துயில் ஆதியாய்!–எனவரும்
ஜோதியாய்!
அமரர் வந்தடி பரவ விடும் படி–அருள் குறுங்குடி நம்பியே!
சரணம்! சரணம்!

திருக்குருகைப் பெருமாள் தம்பிரான் – முத்திரைக்கையும்
முகமும் அழகிய பெருமாள் தம்பிரான்.
திருவாய்மொழிப் பெருமாள் தம்பிரான் – முறுக்குஓலியல்
முகமும் அழகிய பெருமாள் தம்பிரான
அக்கலம்பாகும் பெருமாள் தம்பிரான் – செண்பகச் சடகோபன்
தம்பிரான
ஆழ்வார்கள் திருத்தம்பிரான் – வண்சடகோபன் தம்பிரான்.
காரிமாறன் திருத்தம்பிரான் – மலக்கு நாவீறுடைய பெருமாள்
தம்பிரான
வேதம் தமிழ் செய்த பெருமாள் தம்பிரான்–ஆதி நாதா!
யாதசேகரத் தம்பிரான்
விண்ணவர் தொழநின்ற பெருமாள் தம்பிரான்–கூகைக்
குருகூர் என்றோதும் பரிவுடைய பெருமாள் தம்பிரான
பொருனை ஆறுடைய பெருமாள் தம்பிரான்–
அன்னவாகனமுடைய பெருமாள் தம்பிரான
திருப்புளிக்கீழ் அமர்ந்த பெருமாள் தம்பிரான்–தன்னைப்
பாடும் பெருமாள் தம்பிரான்.
வகுளாபரணத் தம்பிரான்–நாதமுனி திருத்தம்பிரான்
மகிழ மாரன் தம்நிரான்–மதுரகவித் தம்பிரான்

உன்னைப்பாடு என்னைப்பாடு என்று சொல்லும் தேவர்கள்
யதிராஜன் தம்பிரான்

ராமாநுசமுனி திருத்தம்பிரான்
நாழீந்தே தேவா!

சிந்து

எங்கும் எங்கும் நீ இல்லாத இடந்தான் உண்டோ!–
ரெங்கஸ்ரீ கோபால கிருஷ்ணா! தேவராயா!–எங்கும்
கள்ளர்க்கெல்லாம் கள்ளராகிக் கபடற்கெல்லாம் கபடர் ஆகி
வெள்ளர்க்கு வெள்ளுருவாகி வெளியிலே நிற்பாய்.
எள்ளுக்குள் எண்ணெய் போலே இருக்கும் பின் பெருமையை-
உள்ளத்தில் அடங்கும் என்றோதல் ஆகுமோ? – எங்கும்
அடித்த தூணிலே நிறந்தாய் – அதட்டி இரணியனைப்
பிடித்து வெள்ளுகிராலே பிளந்தெறிந்தாயே!
உருத்திடும் அபிமானம் உதவினாய்ப் பாஞ்சாலிக்காய்
படித்தவர் சொல்ல வேணுமோ! பரம் உண்டோ எங்கும்?
புண்டரீகன் நின்புதல்வன்! புவனம் உனக்காசனம்

அண்டர் அண்டத்தோர் உனது அகத்தில் அடிமை
மண்டல மதி இரவி வதனம் திரு நயனம்
கொண்ட கொண்ட கோலம் எல்லாம் கொண்டவன் நீயே!
எங்கும் எங்கும் கீதம்–பிரபந்தம்

கலித்துறை

உண்டால் நிறையும் அமுதமெல்லாம் ஒரு போது சற்றும்
கண்டால் நிறையும் அமுதம் உண்டோ? உண்டு காணும்
தொண்டீர்!

பண்டு ஆலிலையில் துயின்றோன் சோகை பகட்டுக்கு அஞ்சித்
திண்டாடிய பெருமாள் குருங்கேசா திருமுகமே!
பாண்டவர் தூதன் குறுங்குடிநம்பி பரமன் என்றனை
ஆண்டருள் தாமரைத்தாள் இணையான் அருளாள நம்பி
நீண்ட பொன் மேனி என் நெஞ்சகத்தே புக்கு நிற்கின்றதால்
தீண்ட ஓண்ணாது கண்டீர் எமராயர்க்கும் சேனைக்குமே.
அழகிய நம்பீ; குறுங்குடி நம்பீ; அமரருடன்
பழகிய நம்பி, பரந்தோங்கு நம்பி; பழமறைக்கே
முழுகிய நம்பி, மூவேழ் உலகமும் உண்டுமிழ்ந்த நம்பி!
அழகிய நம்பி திருவடித்தாமரை அன்பருக்கே.
சிந்தை வாடி முகம் வாடி பித்தமும் தேகம்வாடித் திரிகின்ற
பேயனை

எந்த வேளையும் வந்து நீ காப்பதற்கோ
கொந்தல் வாழும் மலர்க்காவி வானரம் கோதும் தேன்கனி
கீறிடவே

வந்து பாயும் பொழில்சூழ் குறுங்குடி மாயன் அழகிய நம்பியே.
சிந்தித்தேன்; இருகண் குளிரச் சேவித்தேன்றிபொற் பாதத்தை
வந்தித்தேன்; வல்வினையை மாற்றினேன்; முந்திஅன்பாய்
அங்குமிங்கும் நின்று கனிந்த நம்பியே
அங்குமிங்கும் நின்ற நம்பியே!

வெண்பா

காரார் திருமேனிக் கண்ணார் கௌத்துப மணி
நாராயணர் குருங்கைநம்பியே – கூராழி
கையால் உலகளந்தாய்! காலால்; பிரமர் தொழும்
ஐயா! எனை ஆண்ட ருள்வாய்.

வேறு

மட்டிட்ட பூமகள் சானகிக்காகவே மாரீச வேட்டைஆடி
மதியாமலே சென்ற கர தூடணாதிகள் மணி முடி துதித்த
வீரா!

மாநகர் இலங்கையில ராவணன் ஈன்றருள் மகன்
மேகநாதன் முதலா
மாய்கை வலைதுள்ள மகோதரச்சேனையும்
மடியக்குறைத்த பின்னே

கட்டிட்ட பாளையம் தனியே மயில் ராவணன் கபடமாய் வந்து
தானே
கட்டிலுடனேகொண்டு பாதாளாச் சீதையில் காளிபலி
கொள்ள வைத்தாய்
கனபிலக் காரணனும் மானை புகழ்ந்திருகையால்
அணைத்த பரனே!

முட்டிட்ட ராட்சதர்கள் எல்லோரும் மாண்டபின்
முப்பத்து முக்கோடி தேவர் அறிய
முன்னனர் தப்பாமே விபீடணர்க்கரசருளி
மொய்குழல்சிதையோடும் மூர்த்தமாய் எழுந்தருளி

இட்டமாய அயோத்தணி நகர் வந்தபின்னே
வசிட்டமாமுவீவர் கையால்
முடிசூடி அரசாண்ட ரகுராமநாயகா!
மூவுலகளந்தமாலே!

வெண்பா

மாகமாஞ்சோலையிலும் வானளந்த மணிக்கோபுரமும்
கோவில் எங்கும் பாடும் குருங்கேசா–வாகுவளைச்
சக்கரமும் சங்கும் தனுவாள் கதையுடனே
பக்கம் நின்று காத்தருள்வாய்

வேறு

பாற்கடலில் பள்ளிகொண்ட பார்மகளும் பூமகளும்
சேர்க்கை பிரியாத நம்பி திருவடியும் காண்பேனோ?
வாக்கு நுனி நாக்கறுக்க வந்து தொழும் அரசன்
நாக்கறுக்க நாக்களித்தோன் நம்பி தெய்வ நாயகனே!

பச்சிளநீர்மிதில் நகம் பட்டதென்று ஆகாதே!
கைச்சரசம் என்றதெல்லாம் கைச்சரசம் என்றேனோ!
அச்சுதா! தென்குருங்கை ஆண்டவா! ஆவிவிட
நச்சரவின் மேல் துயின்ற நம்பி தெய்வ நாயகனே!

விருந்த வாழ்வுமே ஞானமும் நீதியாய் விளங்கவே
கருணாகரமாய் அருள் தந்திடாயோ?
சுரும்பு பாடிய சோலையில் நறுமது அணிந்து தானிதாகவும்
ஓடிய சுயம் பிரகாசமும் ஆகிய
அழகிது தெங்கு குரும்பை அனுவிரதமும் பொழில் நடை
குரும்பை மாநகர் மேவிய காசிப
குளந்தை வான் மனமாகிய அழகிய நம்பிமாலே!

குருமணிக் குலங்கள் தூழ்ந்த கோபுர வாசல் கண்டேன்
கருடன் வீற்றிருக்கும் பொன்னின் கம்பமும் கொடியும் கண்டேன்
முருவலர் சோலை தூழ்ந்தமுகில் வண்ணன் குருங்கை நம்பி
திருமுக வடிவுகண்டேன், தீவினை கண்டிலே.

வேறு

தென்னம் பழத்தை ஒரு பொன்னின் குடத்தை
ஒருதில்லையோடு–
அபலை நிகராய்ச் செங்கை மலர் மங்கையோடு–
தங்க மேருவைச் செய் இதழ்க் கரும்பைக்
கன்னமகள் வாரணக்கோட்டு முலை மின்னார்
களிகாதல் அதனை நம்பி நொந்து
கரைசாய்இது சரணம்;
மறவாது துதிசெயும் கருத்தினைத் தந்தருள்வாய்.

அன்ன நிறச்சாலையும் சொர்ண மணிமேடையும்
ஆஸ்தான வீதிதோறும்
அருக்கன் ஒளியில் கைப்
பந்து விளையாடல் புரி அளகை என் பதிகை நிகராய்

கன்னல் இளம்பாகுமே செந்நெல்லில் பாய் ந்திடச்
கதிர்கள் செழிக்கும் வளமையே.

கலிப்பா

காவேரி சிந்து நதிதூழ் குருங்கைப் பதியில் வாழும் கண்ணா
அழகிய நம்பியே!
மாதாபிதா காக்கும் தெய்வம் உற்றோர் கழுமாநிலத்தில்
நீதானே எனக்கு உண்மை ஆகும் ஐயா! விண் நீளம் அளந்த
பாதா! துளபப் புயசயிலா! நயப்பரமபத
நாதா அழகிய நம்பியே! குருங்கை நகர் தெய்வமே!

ஆராயும் போது உன் அடியிணை அன்றிவேறறியேன்
சீரானதா பரம் வேறில்லையே உன் திருவுள்ளத்தில்
கேளாதவன் என்று தள்ளிவிட்டால் என்னை ரட்சிப்பதார்?
நாராயணா! நம்பிராயா! குருங்கை நகர் தெய்வமே!

உந்திக் கமலத்து அயனை உண்டாக்கி உண்பதென்று
தந்திக்கப் பாற்கடல் தான் கடைந்து அதன் மடுவுள்
வந்திக்கு முன் வந்த மாலாம் நம்பிராயன் சரணமதைச்
சிந்திக்கச் சேவிக்கச் சேவிக்கத் தித்திக்குமே!

பிரியாவிடைச் சிந்து

இளவரசே! தென் குருங்கை மாதவனே!
சிவனாலும் காண அறியாப் பரமன் தொழும் நாரணனே
உம்பர்வான் வேயமுதே! பேரருளாளா! பிரியாவிடை!

வெண்பா

கண்ணா! முகுந்தா கருணாகர மேக
வண்ணா! உலகளந்தமாதவா–எண்ணரிய
பீதாம்பரம் தரித்த பேரருளாளா நான்கு
வேதா பிரியாவிடை.

வசனம்

அடியேன் மாதங்கன் தேவரீர் பாதார விந்தம் நோக்கிச்
சேவித்து வெகு வித்தை உண்டானேன்;
கன புத்தி உண்டானேன்
வேண்டிய பாக்கியம் பெற்றேன்
அடியேன் சேரிக்கு விடை கொள்கிறேன்
சுவாமி! பராக்!!

சிந்து

நம்பி நின்ற பூதந்தனை நான்மறவேன்–
குறுங்குடி நம்பியைச் சேவித்து மீள–நடந்தானே பாகவதன்
சங்குசக்கரமும் மகரகுண்டலமும் தமனிய ஆடையும் மறைத்துச்
செங்கையில் அத்தடியும் பழுக்கவே நரைத்த சிகையும்
வெண்புரி நூலும் திங்கள் மங்கலமாக–பாகவதன் வரும் வழியில்
அங்கமா மறையோன் வடிவாய்க் குருங்கை அழகிய நம்பியும்
தோன்றினாரே.

அரிஹரி நாராயணா! கோவிந்த கோவிந்த நம்பி!
அச்சுதன் தம்பிக் கலங்கப் பெருமாள் இப்போதல்லோ! அரியரி!

வசனம்

நம்பிக்கிழவர் : அங்ஙனே போகிறவன் ஆரடா! அடா! அங்ஙனே போகிறவன் ஆரடா!

பாகவதன் : அடியேன் பிள்ளாய்.

நம்பிக்கிழவர் : அடிக்கிறதையும் பிடிக்கிறதையும் விட்டுப் போட்டு உன் பேரைச் சொல்லும் பிள்ளாய்.

பாகவதன் : அடியேன் மாதங்கன் சுவாமி!

நம்பிக்கிழவர் : ஆ! நம்முடைய மாதங்கன் ஓ! ஆ! நம்முடைய மாதங்கன் ஓ! இப்போது பதறிப்பதறிக் கொண்டு எங்க புறப்பட்டாய் பிள்ளாய்?

பாகவதன் : சுவாபி! அழகிய நம்பியைச் சேவிக்கப் புறப்பட்டேன் சுவாமி.

நம்பிக்கிழவர் : ஆனால் நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளடா! கேள்.

பாகவதன் : திருவுள்ளம் பற்றி அருள வேண்டும் சுவாமி!

சிந்து

தென்குருங்காபுரி நம்பியைச் சேவித்துத் தெளிந்த பாகவதா!
இப்போது
ஏன் கும்மிருட்டிலே நீ பதறிப் பேசுவது ஏது காரணந்தான்?

வசனம்

அட! வாரும் பிள்ளாய்! மாதங்கனே! இப்போது சுவாமி அழகிய நம்பியைச் சேவிக்கப் புறப்பட்டது நல்லதாமே! வருகிறபொழுது எந்த வழி வந்தாய்!

பாகவதன் : இந்த வழி வந்தேன் சுவாமி.

நம்நிக்கிழவர் : வாரும் பிள்ளாய் மாதங்கனே! இந்த வழியிலே தானே மனிதனைத் தின்னும் மகாபூதம் நிற்கின்றதே. அதனிடமிருந்து எப்படித் தப்பி வந்தாய் பிள்ளாய்?

பாகவதன் : சுவாமி ஒரு விண்ணப்பம்.

சிந்து

நம் குல நம்பியைப் பாடி வரச்சே, நடுவழியில் பூதம், 'என்னைத் தின்பேன் – தின்பேன்! வா!' என்றதும், மீளவே நான் சில சத்தியங்கள் சொல்லிப் போந்தேன்.

வசனம்

ஐயா சுவாமி! அடியேன் சுவாமியைச் சேவிக்க வருகிற பொழுது, அந்த ராட்சதன் தன் கையிலே அகப்பட்டு எனக்கும் அவனுக்கும் அடிபிடி தர்க்கம் வந்து சில சத்தியமும் உண்மையும் சொல்லிக் கொடுத்து வந்தேன் சுவாமி!

நம்நிக்கிழவர் : ஆ! சத்தியம் சொல்லிக் கொடுத்து வந்தாயோ பிள்ளாய்! ஆனால் நாம் ஒரு வார்த்தை சொல்கிறோம். அதைக் கேளும் பிள்ளாய் பாகவதனே!

சிந்து

வந்த வழி நன்று; நீ இந்த வழி போகாய்!
இந்த வழி போகாய் – உனது
சிந்தை மகிழ்வுற்றே.

வசனம்

வாரும் பிள்ளாய் பாகவதனே! சுவாமியைச் சேவிக்க வந்ததுவும் அந்த ராட்சதன் கையிலே அகப்பட்டுச் சத்தியம்

சொல்லி வந்ததுவும் மகா நல்லதே ஆச்சு. நீ அந்த வழி போக வேண்டாம் பிள்ளாய். இந்த வழி போ! பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : அடியேன் ஒரு விண்ணப்பம்.

சிந்து

முந்தவருவேன் என மொழிந்தமொழி தப்பேன்
அந்தவழி மீள்வேன்; அசத்தியம் உரையேன்

வசனம்

ஐயா! சுவாமி! அடியேன் சுவாமியாகிய நம்பியைச் சேவிக்க வருகிறபொழுது அந்த ராட்சதன் என்னைக் கண்டு மறித்து, இப்பொழுதே உன்னைக் கொன்று, தின்று பசி தீர்த்துக் கொள்கிறேன்' என்று வந்தவன், அதெல்லாம் செய்யாமல், என் சரீரத்தில் எள் அளவாகிலும் காயப் படுத்தாமல், நான் சொன்ன உண்மையையும் சத்தியத்தையும் நிஜமாகக் கேட்டு, சுவாமி ஆகிய நம்பியைச் சேவிக்க விட்ட பூதத்துக்கு நான் பிரதி உபகாரம் செய்யாமல் இருப்பேனோ? அந்த ராட்சதனிடத்தே போகச் சத்தியம் தந்தபடிக்குக் கிருபை செய்வீராக.

நம்பிக்கிழவர் : ஆனால் நாம் ஒரு வார்த்தை சொல்கிறோம். அதைக் கேளும் பிள்ளாய்! பாகவதனே!

பாகவதன் : திருவுள்ளம் பற்றி அருளவேணும் சுவாமி.

சிந்து

நம்பிக்கிழவர் :

வேதியர் நிமித்தம் உயர் மெய்குரு நிமித்தம்
ஓதுவார் தங்கள் பசி உற்றிடும் நிமித்தம்
மாதர்கள் நிமித்தம் அதுவந்து பகரும் பொய்யும்
பாதகமல சரியிது முன்பு உரைசெய் பண்பே!

வசனம்

வாரும் பிள்ளாய் பாகவதனே! நீ இந்த ராட்சதனுக்கு எத்தனை உண்மை சொன்னாலும் எத்தனை சத்தியம் பண்ணிக் கொடுத்தாலும் தோஷமில்லை பிள்ளாய்! அந்த வழியே போகவேண்டாம். இந்த வழிபோம் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : ஐயா சுவாமி! தேவரீர் எத்தனை விதமாகத் திருவுள்ளம் பற்றினாலும் சத்தியதோஷம் வலியாத

படிக்கு அந்த ராட்சதவீடத்தே போக விடை தந்தருள வேண்டும் சுவாமி!

நம்பிக்கிழவர் : வாரும் பிள்ளாய் பாகவதனே! ஆனால் சத்தியம் தப்பலாம் என்று முன்னோர்கள் ஒரு வாக்கியம் சொல்லி இருக்கிறார்கள். அதைக் கேளும் பிள்ளாய் மாதங்கனே!

பாகவதன் : திருவுள்ளம் பற்றி அருளவேண்டும் சுவாமி!

நம்பிக்கிழவர் :

வெண்பா

அந்த விளையாட்டிடத்தும் ஆயிழையார் தன்னிடத்தும்
இந்த உயிர் பிழைக்கும் என்றிடத்தும் – முந்தத்
தனக்கு இடுக்கண் வந்திடத்தும் தார்வேந்தர் தன்னிடத்தும்
மனத்துதித்த பொய்யுரைக்கலாம்

வசனம்

இப்படி அல்லோ சொல்லி இருக்கிறது. நம்முடைய புத்தகத்திலே. அதுவும் அல்லாதே ஓர் உயிர் பிழைக்கு மாயின் ஒன்பது பொய் சொன்னாலும் தோஷமில்லை. ஒரு கிளை சேகரம் பிழைக்குமாகில் நூறு பொய் சொல்லிச் சத்தியம் செய்து கொடுத்தாலும் தோஷமில்லை. ஓர் ஊர் சேகரம் பிழைக்குமாகில் ஆயிரம் பதினாயிரம் பொய் சொல்லிச் சத்தியம் பண்ணிக் கொடுத்தாலும் தோஷமில்லை. அப்படியன்றோ சொல்லி இருக்கிறார்கள் முன்னோர்கள். நீ இந்த வழி போகவேண்டாம். பிள்ளாய் வேறு வழி போம் பிள்ளாய் மாதங்கனே!

பாகவதன் : அடியேன் ஒரு விண்ணப்பம். முன்னாள் பூமிப்பிராட்டியாருக்கு ஞானப்பிரான் அருள் செய்ததாக ஒரு வாக்கியம் கேட்டிருக்கிறேன். அந்த சுலோகத்தை விண்ணப்பம் செய்கிறேன். சித்தம் அறிய வேண்டும் சுவாமி.

நம்பிக்கிழவர் : ஆனால் சொல்லும் பிள்ளாய் மாதங்கனே!

சுலோகம்

பாகவதன் :

ஸத்யமே மாதா
பிதா ஜ்ஞானம்
தர்மமே ப்ராதா:

சாந்தம் பத்னி:
ஷமா புத்ர:
சடாயதே நய வாங்க்தம்
நகிஞ்சித் பர்வதா பாரம்
நசிஞ்சித் ஸப்த ஸாகரம்
ஸ்வாமி த்ரோஹம் இதம் பாரம்
விச்வாச பாதகம்

வசனம்

ஐயா! சுவாமி! சத்தியமே, மாதா, பிதாவே ஞானம், தர்மமே தம்பி தமையன், தெய்வமே தோழன், சாந்தமே பர்ர்வை பொறுமை, புத்திரன் – இந்த ஆறு குணத்தையும் உடையதால் இருக்கிற பேர்களிடத்திலே, ஸ்ரீநாராயணன், அனவரத காலமும், அவன் இதயத்திலே எள்ளுக்குள் எண்ணெய் போலே, எழுந்தருளி இருக்கிறார். சுவாமித்து ரோகமும் விசுவாச பாதகமும் செய்கிற பேர்கள் இந்தப் பூமியிலே. பார வான்களாக இருப்பார்கள். ஆனபடியாலே, அடியேன் ஒருக்காலும் சுவாமித் துரோகமும் விசுவாச துரோகமும் செய்கிறவன் அல்ல. என் சரீரத்தை எள் அளவாகிலும் பார்க்கிறவன் அல்ல. சத்தியம் தவறுபவனும் அல்ல. அந்த ராட்சதனிடத்தே போக விடை தந்தருள வேணும் சுவாமி!

நம்நிக்கிழவர் : இன்னும் ஒரு வார்த்தை சொல்கிறோம். அதைக் கேளும் பிள்ளாய் மாதங்கனே!

சிந்து

பூதநிலை தேடி வழி போக நலம் ஆமோ?
சாக நினையாது உயிர் பிழைக்க வழி பாரீர்.
ஏதமுறு பூதம் உம்மை உண்பதென் றிருந்தால்
ஓது; அவனிலும் கொடியேன் யாரென உரைப்பீர்.

வசனம்

வாரும் பிள்ளாய் மாதங்கனே! பதினாயிரம் புத்தி சொல்லியும் அந்த ராட்சனிடத்தே போவேன் என்றால் பிழையாய்; அந்த வழி போக வேண்டாம். இந்த வழி போம் பிள்ளாய்! மாதங்கனே.

பாகவதன் : சுவாமி! அடியேன் ஒரு விண்ணப்பம்.

சிந்து

மன்றலக மனத்தாமரை வணங்கும் மறையோனே!
வந்தஅடியேன் வனம் முன் மருவ விடை அருள்வீர்! அருள்வீர்.

வசனம்

பாகவதன் : சுவாமி! நான் இன்று திருஏகாதசி விரதம். அனுஷ்டித்துக் கையும் வீணையும் தாளமுமாகப் பாடிக்கொண்டு சுவாமியாகிய நம்பியைச் சேவிக்க வருகிறபொழுது அந்த ராட்சதன் அர்த்த ராத்திரி பாதி நேரம், அத்துவானக் காட்டுக்குள்ளே முகில் போலே மேனியும் பிறை போல எயிறுமாக நின்று, நிலமதிர ஓடி, மகா நிட்டூரமாக அலறி, இரு கண்கள் நெருப்பாக வெருட்டி மேலே விழுந்து, பிச்சுப் பிடுங்கித் தின்கிறோம் என்று வந்தவன், அதெல்லாம் செய்யாமல், என் சரீரத்தில் எள் அளவாகிலும் காயப்படுத்தாமல் நான் சொன்ன சத்தியமும் உண்மையும் கேட்டுச் சுவாமியாகிய நம்பியைச் சேவிக்கவிட்ட பூதத்துக்கு நான் பிரதி உபகாரம் செய்யாமல் போவேனோ? ஆனபடியாலே, சத்தியம் பிறழுபவன் அல்ல. என் சரீரத்தை எள் அளவாகிலும் பார்க்கிறவனும் அல்ல. சத்தியப்படிக்கு அந்த ராட்சத னிடத்திலே போக கிருபை செய்வீராக.

சிந்து

நம்பிக்கிழவர் : நன்று நன்று சத்தியங்கள்
நான் மறவேன் என்றால்
நம்பி அருளால் உனக்கு
நன்மை உளதாமே.

வசனம்

ஒரு வார்த்தை சொல்கிறாம். அதைக் கேளும் பிள்ளாய், மாதங்கனே! நாம் எத்தனை புத்தி சொல்லியும் அந்த ராட்சதவீடத்தே போவேன் என்கிறாயே நீயே ஒரு சொல் வாசகன் பிள்ளாய். நீயே உண்மைக்கு இனியான் பிள்ளாய். உன் நெறிக்கு நாம் மகிழ்ந்தோம் பிள்ளாய், மாதங்கனே! சுவாமி அழகிய நம்பி கிருபா கடாக்ஷத்தி னாலே உனக்கு வெகு பாக்கியமும் வேண்டிய சம்பத்தும் வேண்டிய திரவியமும் மோக்ஷமும் கதியும் உண்டாகக் கடவது. உன்னைக் கண்ட மாத்திரத்திலேயே ராட்சதனுக் குக் கோபதாபம் அன்றிப் பசி தாகமன்றிப் போகக் கடவது. சுவாமியாகிய நம்பி கிருபா கடாக்ஷத்தினாலே அந்த ராட்சதனுக்கு ராட்சத வடிவு போய் பழைய படியே பரமவமிசமாகப் போகக் கடவது நாம நம் முடைய கிரகத்துக்குப் போய் வருகிறோம் பிள்ளாய் மாதங்கனே!

பாகவதன் : அடியேன், பிரியாவிடை அருளும்.

சிந்து

நாராயணனே சரணம் சரணம்
நம்பி நின்ற பூதந்தனை
நண்ணிடவே, குறுங்குடி
நம்பியைச் சேவித்து மீள
நடந்தானே பாகவதன்.

வசனம்

ராட்சதன் : வந்தாயோ வந்தாயோ பிள்ளாய் பாகவதனே!

சிந்து

பாகவதன் :

வந்தேன் வந்தேன் வண்மை உண்மை மறவாத வாசகனே!-
வளர்பெரும் பசியோடு வரவு பார்த்துநின்றாயே!
சந்தாபம் தீர் விரதத்துக்கு சதிரில் சிறுகுறை உண்டோ?
தயங்காமல் நீ பாங்காகவே –
சாத்திரம் சொல்லித் தின்பாயோ?

வசனம்

வாரும் பிள்ளாய் ராட்சதனே! நீயே ஒரு சொல் வாசகன். நீயே மகா உத்தமன், ஐயோ! மிகுந்த பசியோடு என் வரவு பார்த்து இவ்விடத்திலே நின்றாயே! பிள்ளாய் ராட்சதனே? வந்தேன்! வந்தேன்! பிள்ளாய் ராட்சதனே!

வேறு

எந்தன் உடலும் உயிரும் அங்கமும் மடங்காமல்
வந்து வளர்ந்தது காண் மாலருளால் இன்னேரம்;
பசியாலே வருந்தும் பூதமே!

ராட்சதன் : பொறும் பிள்ளாய் பாகவதனே! உன்னுடைய நெறிக்கு மகிழ்ந்தோம். பிள்ளை பாகவதனே! நீயே ஒரு சொல் வாசகன் பிள்ளாய். நீயே உண்மைக்கு இனியான் பிள்ளாய்! பாகவதனே? நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும்பிள்ளாய்! பாகவதனே!

பாடல்

இங்கே பல சபதம் அயலாக
அங்கே போனதின்பின் உண்டான தெல்லாம் – சங்கீத

வண்மையாய பாகவதனே! மறவாத வாசகனே!
உண்மையினை என்னோடு உரை.

வசனம்

வளரும் பிள்ளாய்! பாகவதனே! என் இடத்திலே நின்று சுவாமி ஆகிய நம்பியைச் சேவிக்கப்போனதன் பிறகு, சுவாமி சன்னதியிலே நடந்த உண்மைக்கு உத்திரம் எல்லாம் ஒன்றும் ஒளியாமல் என்னிடத்திலே சொல்லும் பிள்ளாய் பாகவதனே!

பாகவதன் : அரிஹரி நாராயணன் சுவாமி சன்னதியிலே நடந்த உண்மைக்கு உத்திரம் எல்லாம் உன்னுடனே சொல்வார்களோ? பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : வாரீர் பாகவதனே! உன்னுடைய குடியும் கோத்திரத்துக்கும் புண்ணியமாக என் பேரிலே பட்சம் வைத்துச் சுவாமி சன்னதியில் நடந்த உண்மைக்கு உத்திரம் எல்லாம் ஒன்றும் ஒளியாமல் முன்னுடனே சொல்வீராக.

பாகவதன் : சொல்கிறேன் கேளும் ராட்சதனே! உரையாய் என்ற வல்லரக்கா? உலகம் அளந்த புயநம்பி தன்னை, விரையார் கமலத்தாள் போற்றிர் மெய் மலஹரி, காந்தாரம், துரையா நாட்டை, தன்யாசி, கொல்லி, சுத்தம் வசந்தா முதலாகக் கரையாக்கீதம்பல பாடி கைசிகமும் நான் பாடினனே.

வசனம்

பாகவதன் : வாராய்! ராட்சதனே! உன்னிடத்தில்நின்று, சுவாமி சன்னதியிலே நான் போனதன் பிற்பாடு, நாலாறு ராகம் பாடினேன். நாலாறு கீதம் பாடினேன். திருநாமங்களும் சேவித்தேன். ஒடுக்கத்திலே கவுசிகம் என்று ஒரு பண்பாடிச் சேவித்து வேண்டிய பாக்கியமும் மோக்ஷமும் பெற்றுத் திரும்பி வருகிற பொழுது பிராமணன் அனுக்கிரகமும் பெற்று வந்தேன் பிள்ளாய்! ராட்சதனே!

ராட்சதன் : வாரீர்! பாகவத தேசிகரே! சுவாமி சன்னதியிலே நடந்த உண்மையும் வழியிலே நடந்த பிராமணர் அனுக்கிரகமும் ஒன்றும் ஒளியாமல் உண்மையாகச் சொன்னீரே! இனி மேலே உம்மைக் கொல்கிறதே இல்லை. என்னுடைய பசி என்னுடனே இருக்கட்டும். இப்போது

சுவாமி ஆகிய நம்பியைப் பாடிய பலத்தை என் கையில் தந்து போட்டு, நீ உன் உயிருடன் போவாயாக.

பாகவதன் : அரிஹரி நாராயணா! என்ன வார்த்தை சொன்னாய்? பிள்ளாய்! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே.

ராட்சதன் : ஆனால் சொல்லும் பிள்ளாய் பாகவதனே!

பாடல்

பாகவதன் :

உதிரம் குடிப்பேன், மாமிசத்தைத் தின்பேனென்பை உதறுவேன்
எதிர்மறித்து மேலே விழுந்த வல்லரக்கா! அது நீ செய்யாமல்
சதுர்முகன்முன் பாடிய பலத்தைத் தாராய் என்றால் தருவேனோ?
எதிர்மொழிந்த படியேநீ இப்போது தின்பாய் தப்பாதே.

வசனம்

அடடா! வாரும் பிள்ளாய்! ராட்சதனே! என் உதிரம் குடிப்பேன் மாம்சம் தின்பேன் என்று சொன்னவன் அது எல்லாம் செய்யாமல் சுவாமி அழகிய நம்பியைச் சேவித்த பலத்தைத் தா என்றால் தருவேனோ? நான் சொன்ன படிக்கு நான் வந்தேன். நீ சொன்ன படிக்கு என்னைப் பட்சித்துக் கொள்ளும் பிள்ளாய்! ராட்சதனே!

ராட்சதன் : வாரீர் பாகவத தேசிகரே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன் கேட்பீராக.

சிந்து

ஏடா! உனக்குச் சொன்னேன் இன்னம்
ஏகாதசி உண்டே, ராகம் உண்டே
போடா பலத்தைத் தந்து இது
புத்தி என்றெண்ணியே போவாயே

வசனம்

வாராய் பாகவதனே! வேண்டிய ஏகாதசி உண்டே. ராகம் உண்டே. அனுஷ்டித்துக் கொள்ளலாம். சுவாமியைப் பாடின பலத்தை தந்துவிட்டு, உன் உயிரோடு நீ போவாயாக.

பாகவதன் : என்ன வார்த்தை சொன்னாய் பிள்ளாய்! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேளும் பிள்ளாய் ராட்சதனே!

சிந்து

பாகவதன் :

எண்ணாதே என்னுரைத்தாய் நீ;
என்ன பேயாட்டத்தை ஆடுகிறாய்?
நண்ணாகக் கேள் வல்லரக்கா! எங்கள்
நம்பியைப் பாடும் பலத்தை நச்சி
எண்ணாதே நீ உரைத்தாய்.

வசனம்

வாராய் ராட்சதனே! நீ என்ன பேயாட்டம் பேசுகிறாய்? நான் சொன்ன படிக்கு நான் வந்தேன். நீ சொன்ன படிக்கு என்னைப் பட்சித்துக் கொள்ளும் பிள்ளாய்! ராட்சதனே!

ராட்சதன் : பொறு; பொறும் பாகவதனே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேட்பாயாக.

சிந்து (பாடல்)

உற்றாரும் தாய் தந்தையும் நல்லுடன் பிறப்பும் பெண்டிர் பிள்ளைகளும்
கற்றாவின் கன்றதுபோல உன்னைக் காதலித்தே வழிபார்த்து நிற்பார்
செற்றாண்மை பேசவேண்டாம்; இன்றுசெய்த கானத்தின் பலத்தைத் தந்து
பொற்றாமரை முகத்தாய்! இது புத்தி என்றெண்ணியே போவாயே.

வசனம்

வாரீர்! பாகவத தேசிகரே! உன் உற்றாரும் பெற்றோரும் பெண்டுகளும் பிள்ளைகளும் கற்றாவின் கன்றது போல, நீ வருகிற வழியைப் பார்த்து நின்று தவிப்பார்களே! சுவாமி அழகிய நம்பியைப் பாடின பலத்தை எனக்குத் தந்து விட்டு நீ உன் உயிருடன் போவாயாக.

பாகவதன் : வாராய்! ராட்சதனே. நான் ஒன்று சொல்கிறேன் கேட்பீராக.

சிந்து

ஆராயாதேன் பேசுகிறாய்; இது புத்திமோக மல்லாமல் மற்றுமுண்டோ?
நாராயணன் அடியார் மிக்க ஞானம் பக்தி வைராக்கியம் விடார்.

வசனம்

வாராய் ராட்சதனே! ஸ்ரீமந் நாராயணன் அடியாராய் இருப்போர் பக்தி, முக்தி, வைராக்கியம் இவற்றைவிட அறியார்கள். ஆகையால் நானும் பக்தி, முக்தி, வைராக்கியம் விடேன். சுவாமி அழகியநம்பியைப் பாடின பலத்தைத் தருகிறவனும் அல்ல. என் சரீரத்தை எள் அளவாகிலும் பார்க்கிறவனும் அல்ல. நான் சொன்னபடிக்கு நான் வந்தேன். நீ சொன்னபடிக்கு என்னைப் பட்சியாது இருந்தால் அறம் கொன்ற பாதகன் ஆவேன். பிள்ளாய் ராட்சதனே.

ராட்சதன் : வாரும் பிள்ளாய் பாகவதரே! இன்னும் ஒரு வார்த்தை சொல்கிறேன் அதைக் கேட்பிராக.

சிந்து

நிட்டூரம் ஏன் பேசுகிறீர்? சற்றும்
நேசம் இல்லையோ? என்பால் உனக்கு
மகிழ்குருந்தார் மார்பா! பலன்
பாதியாகிலும் தருவாயே! நீட்டூரம்..?

வசனம்

ராட்சதன் : வாரீர்! பாவதரே! நிட்டூரம் ஏன் பேசுகிறீர்? சற்றாகிலும்என் பேரிலே, நேசம் இல்லையோ? சுவாமி ஆகிய அழகிய நம்பியைப் பாடிய பலத்திலே பாதி ஆகிலும் தந்து போனிராக.

பாகவதன் : அட வாரும் பிள்ளாய் ராட்சதனே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன் கேட்பாயாக.

சிந்து

தாரேன் ஒருசற்றும் நான் இனிச்
சந்தேகம் வேண்டாம் – இனியுனக்கு
பாரேன் உயிர்தன்னையும்
இந்தப்பகட்டு என்னுடன் பலியாதுகாண்
தாரேன் ஒரு சற்றும் நான்.

வசனம்

வாரும் பிள்ளாய்! ராட்சதனே சுவாமி அழகிய நம்பியைப் பாடின பலத்திலே ஒரு கிஞ்சித் மாத்திரமாகிலும் தருகிறவனும் அல்ல. என் உயிரைப் பார்க்கிறவனும் அல்ல. நான் சொன்னபடிக்கு வந்தேன். நீ சொன்னபடிக்கு

பட்சியாது இருந்தால், அறம் கொன்ற பாதகன் நீ ஆவாய். பிள்ளாய் ராட்சதனே!

ராட்சதன் : பொறு; பொறும் பிள்ளாய்! பாகவத தேசிகரே! நான் ஒரு வார்த்தை சொல்கிறேன். கேட்பீராக.

சிந்து

பொல்லாங்கு செய்ததெல்லாம்
பொறுத்தென்னை ஈடேற்றவே – பிணைத்து
நல்லாய் நீகேள் பாகவதா பலன்
நாலதில் ஒன்றாகிலும் நல்காயோ?

வசனம்

வாரீர்! பாகவத தேசிகரே! நான் செய்த பொல்லாங்கையும் பிழைகளையும் ஒன்று நூறாகப் பொறுத்து, சுவாமி அழகிய நம்பியைப் பாடின பலத்திலே, நாலத்தொரு பங்கு ஆகிலும், ஒரு கிஞ்சித் மாத்திரமாகிலும் தந்து என்னை ரக்ஷியும் ஐயா! என்னை ஈடேற்றும் ஐயா! பாகவத தேசிகரே!

கலித்துறை

பாகவதன் :

கூறேபிறை எயிறும் முகில் மேனியும் கொண்டு விழி
நீரே சொரிந்து நின்றாய்; நெடுங்கோபம் விட்டாய்
பேரேது உனக்கு? நிலைஏது? பொலிவொடு நின்ற
சீரேது உரை அரக்கா! உண்மை ஞானம் தெரிவதற்கே!

வசனம்

வாரும் பிள்ளாய்! ராட்சதனே! நான் வீணையும் கையும் தாளமுமாக அணிவிரதத்துடனே சுவாமி ஆகிய நம்பியைச் சேவிக்கப் போய் வருகையிலே, நீ இந்த அர்த்த ராத்திரி நேரம், அத்துவானக் காட்டுக்குள்ளே, முகில்போல் மேனியும், நிறைபோல் எயிறுமாக நின்று நிலமதிர ஓடி, மகா நிட்டூரமாய் அலறி, இரு கண்கள் நெருப்பாக, மகா அதிக வேதகத்துடனே வெருட்டி மேலே விழுந்து, பிச்சுப் பிடுங்கித் தின்கிறேன் என்று வந்தவன் அதெல்லாம் செய்யாமல், எள் அளவாகிலும் என் சரீரத்திலே காயப் படுத்தாமல், சுவாமி ஆகிய அழகியநம்பியைப் பாடின பலத்தைத் தா என்றும் பாதி தா என்றும் நாலத்தொன்று தா என்றும், ஒரு கிஞ்சித் மாத்திரமாகிலும் தா என்றும்

எள் அளவாகிலும் தா என்றும், என்னை ரக்ஷி என்றும் என்னை ஈடேற்று என்றும் இரந்தேன் இரந்தேன் என்றும் கண்ணீரும் கையுமாய் வந்து நிற்கிறாயே! உன் ஊர் ஏது, உன் பேர் ஏது? உன் குலம் ஏது? உன் கோத்திரம் ஏது? உனக்கு இந்த வடிவு வந்த காரணம் ஏது? ஒன்றும் ஒளியாமல் சொல் பிள்ளாய்! ராட்சதனே!

ராட்சதன் :

ஆனால் சொல்கிறேன் கேட்பீராக. சரககோத்திரத்தில் சோம சன்மா என் பேரதாகும்.

பரகதிவேத நான்கும் அங்கும்ஓர் ஆறும் பின்பாய்
திரகதியாக ஓதிச் செல்வத்தின் மிகுதியாலே
நரகமே தீர்க்கும் வேள்வி நண்ணியே செய்யல் உற்றேன்.
செய்திடும் வேள்விதன்னில் மந்திரம் பிழைத்ததாலே
மையுறு சூல தோஷம் வந்திடும் அதனால் ஆங்கே
வெய்ய தோர் மரணம் அன்றி வேள்வியும் முடித்திடாமல்
ஐயனே! காலதூதர் அடர்ந்தென்னைக் கொண்டு போனார்
போனபின் யமனும் என்னைப் புகையென மிகவும் நோக்கித்
'தானமாம் வேள்வி தன்னில் தனமுறை முடியாத் தோஷம்
ஆனதால் நீ போய் பிரம்ம ராட்சதனாவாய்' என்றார்.
என் எய்யா வடிவுக்கு எப்போ மோசனம் என்னக்கேட்டேன்.
உண்மை ஞானம் தவறாத உமையாள் பதியும் தவம் புரியும்
வண்மை மகேந்திர சாய்கை தனில் மருவும் சிந்து நதிப்புனல் சூழ்
செண்மை வைகுந்த வள நாட்டில் செல்வக் குருங்கா புரியதனில்
விண்மை எழுபத்தெண் பிரமா மேவித்தானே வீற்றிருப்போர்
நித்யர் முக்தர் புடை சூழும் நீண்ட பொன்மேனி நம்பிதன்னைப்
பக்தியுமான சண்டாளப் பாடுவானும் பண்பாட
முத்திதரும் கார்த்திகை மாதம் முற்பக்கத்து ஏகாதசி தன்னில்
ஒன்றை இரவிலே வருவான் அங்கே உன் சாபம் தீர்ந்திடவே

வந்தவனைக் கண்டதற்பின் வழக்கால் வசனம் பல பேசி

சிந்தை மகிழ்ந்தே அவன் அருளால் ஜன்மம் தீர்ந்து கதிபெறுவாய்

இந்த நிலத்தேபோ என்றார் யானும் போந்தேன் நெடுநாளாய்

புந்தி உடையை உனதடியைத் தொழுதேன் அருள் நீபுரிவாயே.

சிந்து

ராட்சதன் :

பேய் நான் அல்லவோ தேவரீர் தன்னையும் பின் தொடர்ந்தே திரிந்தேன் பாகவதரே!
இப்போ ஆன கோபமெல்லாம் பொறுத்து அடியேனுக்கு உதவி அருள்புரிய வேண்டும் பாகவதரே!
மாதா பிதா குரு தெய்வமும் நீ எனக்கு; வண்ணம் அழகிய நம்பி நீயே
ஆதாரம் நீ எனக்கு; கிருபை செய்து அருள் புரிய வேணும் பாகவதரே!

வசனம்

வாரீர்! பாகவத தேசிகரே! அடியேன் முற்பிறப்பிலே வேத வம்சத்திலே சரக கோத்திரம்; என் பெயர் சோம சன்மா. எனக்கு வித்தையும் புத்தியும் செல்வமும் திரவிய மும் மிகுந்தபடியாலே அடியேன் ஒரு யாகம் தொடங்கி நடத்தினேன். அந்த யாகத்திலே ஒரு மந்திரம் பிழை ஆன படியாலே, "பிரம்ம ராட்சதனாகப் போவாய்" என்று சபித்தார்கள். "அடியேனுக்கு சாப விமோசனம் எப்பொழுது?" என்று கேட்டேன். அப்பொழுது தேவாதிகள் எல்லோரும், "கார்த்திகை முன்பட்சத்துத் திருஏகாதசியிலே, மகேந்திரகிரி பர்வதச் சாய்கை, சிந்து நதி தீரம் ஒருபுற மாக, ஸ்ரீவைகுந்த வளநாட்டில் குருங்காபுரியில், சுவாமி அழகிய நம்பியைச் சேவிக்க, ஒரு சண்டாளன் பாடுவான் வருவான். அவனாலே உனக்குச் சாப விமோசனம்" என்று அனுப்பினார்கள். அந்தப்படி நானும் வந்து நெடு நாளாகத் தேவரீர் வரவு பார்த்துக்கொண்டு இவ்விடத்திலே நின்றேன். தேவரீரைக் காணப்பெற்றேன். சுவாமி ஆகிய நம்பி கடாக்ஷமாகவும், உம் குடிக்கும் கோத்திரத்துக்கும் புண்ணியமாகவும், சுவாமி ஆகிய நம்பியைச் சேவித்த

பலத்திலே எள் அளவாகிலும் தந்து என்னை ரட்சியும்
ஐயா! என்னை ஈடேற்றும் ஐயா! பாகவத தேசிகரே!

பாகவதன் : மகாநன்றாச்சு பிள்ளாய் ராட்சதனே! இனி
நான் ஒரு வார்த்தை சொல்கிறேன் கேட்பாயாக.

சிந்து

வென்றி மாவலி கபுசிகன் விதிசிவன் சுரர் போற்ற
நின்று அருள் நம்பி பிறையுடன் நேமந்தள்ளும்,
அன்று பாடிய கைசிகராக பலத்திலே நாலத்தது
ஒன்று தந்தேன்.

சுவாமி அழகிய நம்பி கிருபா கடாக்ஷத்தினாலே
நீ இந்த ராட்சத வடிவு போய் பழையபடிக்கு
பிரம வம்சமாகப் போகக் கடவது.

ராட்சதன் :

இங்கே சாதித்தருளவேணும் ஐயா பாகவத தேசிகரே!

வாழிச் சிந்து

செய்ய தாமரைத்தாளிணை வாழியே
சேவை வாழி திருநாபி வாழியே
கையும் ஏந்திய முக்கோலும் வாழியே
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத் திருத்தோளிணை வாழியே
பொய்யிலாத மணவாள மாமுனி
புந்தி வாழி புகழ் வாழி வாழியே.

கைசிக நாடகம் முற்றிற்று.

சுவாமி நின்றபொன்மேனி நம்பி துணை.

பின்னிணைப்புகள்

கோவில் கைங்கரியப் பாடல்கள்

கைங்கரியங்கள் என்றால் சேவை அல்லது தொண்டு என்பதாகும். கீதம் அல்லது இசைத் தொண்டு கொவில்களைப் பொருத்தவரை பெரிய மேளம், சின்ன மேளம் என இரு வகைப்படும். நாதஸ்வரம், தவில், நகரா போன்றவைப் பெரிய மேளமாகும். தட்டு, முட்டு, தித்தி, குழல், பாடல் ஆடல் ஆகியவை சின்ன மேளமாகும். இவற்றுள் ஆடலும் பாடலும் முன்னர் தேவ தாசிகளின் தொண்டாகும். தினசரி பூஜா ஆகமவிதிகளில் அதிகாலை விஸ்வரூபத்திலிருந்தே பாடல் ஒரு சேவையாக் கையாளப்படுகிறது. முன்னர் இது தாசிகளாலும், நட்டுவனாராலும் நடைபெறும் சேவையாக இருந்தது. முகவீணை எனும் நாதஸ்வரம் போன்ற துளைக்கருவியுடன் பாடப்பெற்று வந்தது. தற்போது புல்லாங்குழல் மட்டும் இசைக்கப் படுகிறது. கீதம், நாட்டியம் ஆகியவை சின்னமேளப் பகுதிகளில் தெய்வ அடியார்கள் பரமனுக்குச் செலுத்தும் காணிக்கையாக்க் கருதப்படுகிறது.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எனும் ஆழ்வார்களது தமிழமுதப் பாசுரங்கள் ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் தலையான இடம் பெற்றதாகும் வலிமைபெற்ற இசை இழை வின் குரல் அசைவுகளோடு . மந்திரம் முழங்குதல் போல் சேவித்தல் தொண்டு நடைபெறும் வழிபாட்டுமுறை நேரங்களை சேவாகாலம் என்பர்' நாலாயிரத் திவ்யப் பிரபந்த பாடல்களைப் பலர் இணைந்து இழைவு கலந்த தொனியோடு பெருமாளைப் போற்றுவதற்கு சேவாகாலம் அல்லது கோஷ்டி என்று கூறுவர். இது முடிந்தபிறகு பெருமாள் தீர்த்தமும். பொங்கல் போன்ற பிரசாதமும் வழங்கப்படும். இதற்கு தீர்த்த வினியோகம் என்பது சொல்வழக்கு. ஜீயர்மடங்களின் நிர்வாகத்திலுள்ள கோவில் களில் தீர்த்த வினியோகம் ஜீயர் சுவாமிகளுக்கு இராஜ மரியாதை நடந்தபிறகு ந்டைபெறும். இக்கைங்கரிய நியமத்துள் தாசிகள் நம்மாழ்வார் மீது பாட அது நாயனத்தில் ஏற்று இசைக்கப்படும். இதைத் திருநாமம் பாடுதல் என்பர்.

சதிர் என்றால் நாட்டியம் என்று பொருள். அவள் பார்ப்பதற்கு சதிராக இருப்பவள் என்ற ஒரு சொல்வழக்கைச் இளம் வயதில் கேட்ட நினைவு ஒன்று உண்டு. அதன்படி சதிர் அழகைக் குறிப்பதான சொல்லாகிறது. சதிராடல், சதிராட்டம் ஆகிய சொல்வழக்குகள் ஆலய வழிபாட்டுடன் இணைந்தவை. பெருமாள் கோவில்களில் புறப்பாடு நடக்கும் போது கோவிலை ஒட்டிய தெற்குமாட வீதியில் வாகனங்களில் எழுந்தருளும் பெருமாள் முன்பு சதிர் நிகழ்த்தப்பட்டதாகத் தெரிகிறது. இந்நிகழ்வு அபிநயம் கலந்த பாசுரக்களா என்பதற்கு உரிய தகவல் கிடைக்கவில்லை. மார்கழிமாதம் இருபத்தி ஐந்தாம் தேதிமுதல் மாதந்தோறும் தைத் திங்கள் இரண்டாம் தேதிமுடிய கனு உற்சவம் திருக்குறுங்குடி, நாங்குனேரி ஆகிய திருப்பதிகளில் நடைபெறும். கனுவன்று தாயார் புறப்பாடு மாடவீதியில் மட்டும் நடைபெறும். அப்போது தாசிகளால் அந்தந்தத் திருப்பதி நாச்சியார் மீதுள்ள பாடல்களுக்கு வளைக்கரங்கள் தாமொலிக்கும் கும்மி இசைத்ததாகத் தெரி கிறது. ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தினை ஒட்டி திருக்குறுங்குடியிலும், உத்திர நட்சத்திரத்தினை ஒட்டி நான்குநேரியிலும் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். இத்தருணத் தில் அந்தந்த நாச்சியார்கள்மீது ஊஞ்சல் பாட்டுக்கள் பாடப் பெறும். பிரம்மோற்சவ காலங்களில் தேர்த்திருவிழாவை ஒட்டி முதல் நாள் இரவு உற்சவமூர்த்திகளை தேரில் எழுந்தருள செய்து சேவைதரச் செய்யும்போது நாதசுவரத்தில் ஓடம் இசைக்கப்படுவது உண்டு. மிதத்தலின் அசைவு கதியைப் பின்புலமாகக் கொண்ட இசை இழைவு ஓடம். பண்டு தேவதாசிகள் அவ்விழைவில் பாட அப்பாட்டுவரிகள் நாதசுவரத் தில் இசைக்கப்படுவதுண்டு. கப்பல் பாட்டு என்றும் அவ்விசை ஒழுகிற்குப் பெயர். பாட்டுவரிகள் அந்தந்த திவ்ய திருப்பதி களின் திருமூர்த்திகளைச் சிறப்பித்து வைணவ தத்துவம், ஆகமங்கள், வேதங்கள் ஆகியவைகளைக் கப்பல் கட்டுவதின் பல பகுதிகளாக்கி. ஆழ்வார்கள். ஆச்சாரியார்கள் போன்றோர் வந்து வழிபடுவதாக அமைந்திருக்கும்

திருக்குறுங்குடி வடிவழகிய நம்பித் திருக்கோவில் உற்சவங் களைப் பின்புலமாகக் கொண்ட பாரம்பரிய கும்மி, கோலாட்டம், ஊஞ்சல் ஆகிய பாட்டுவரிகளைத் தேடித் தந்த பி.கே ஸ்ரீனிவாசன் அவர்களும், உற்சவத் தகவல்களைத் தந்து உதவிய திருக்குறுங்குடி திருநாராயண சுவாமிகள், ஆழ்வார் திருநகரி நடராஜக் கம்பர், கண்ணன், நான்குநேரி நாராயணக் கம்பர் ஆகியோரும் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

திருக்குறுங்குடி ஸ்ரீநம்பிராயர்
சோபனப் பாட்டுக்கள்

கண்ணல் தன்னில் முத்தீனும் கனக சிந்து நதி உலவு
செந்நெல் வயல் தூழ் குறுங்கை செங்கனிவாய் நம்பிதன்மேல்
நன்னயமாய் சோபனங்கள் நான் இசைந்து பாடுதற்கு
சன்னதியில் வாழ் கருடன் ஸ்வாமி துணை காப்பாயே!

வேதமலை தங்கமலை வெள்ளிமலை பொதிகை மலை
இதமுடன் கால் நிறுத்தி நீண்ட மலைபந்தல் இட்டு
கீதம் வளர் மஹேந்திரகிரி சிங்காசனம் போட்டு
நாதன் நம்பி வீற்றிருக்கும் நாடும் என்னை சோபனமே!

மாணிக்கக் கால் நிறுத்தி வைரவளை மேல் போட்டு
ஆணிமுத்து மரகதத்தால் அழுத்தும் மணிமண்டபத்தில்
வாணி சுப மங்களங்கள் வாழ்த்தும் நம்பிராயருக்குப்
பூணும் எண்ணெய்க் காப்பு அணியப் பூலோக சோபனமே!

மெல்ல நல்ல வஞ்சியர்கள் விசிறிகள் தான் சுழற்ற
வல்லி மருங்குடையான் மதுரகவி பாடி நிற்க
கல்லைப் பெண்ணாக்கும் நம்பி கமழ் எண்ணெய்க் காப்பணிய
சொல் உலகும் வைகுண்ட லோகமெல்லாம் சோபனமே!

ஆலாத்தி பெண்கள் எல்லாம் அலங்காரமாக நிற்க
தாலத்திருவிளக்கு சன்னிதியில் நின்று துலங்க
நீலவர்ணமேக நம்பி நிறைந்த எண்ணெய்க் காப்பணிய
பூணும் எண்ணெய்க் காப்பணிய பூலோக சோபனமே!

கும்ப முலை மாதர் எல்லாம் கும்மி அடித்து நிற்க
செம்பவள முன்னோர்கள் செய சோபனம் பாட
அன்பு தரும் மாய நம்பி! அகில் எண்ணெய்க் காப்பணிய
இன்ப வளம் சிறந்து இலங்க சுக்ரீவர்க்கும் சோபனமே!

வேத பாராயணங்கள் வேதியர்கள் நின்று முழங்க
சீலமுடன் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவாய்மொழி ஓத
நாதன் என்று தென்குறுங்கை நாயகியாள் எண்ணெய்விட
பூசனையாய் என்னைப் பாடப் புரந்தார்க்கும் சோபனமே!

காயாத மரங்கள் எல்லாம் காய்த்துப் பழம் சொரிய
ஓயாமல் தேன்மாரி உகந்து மிகப் பொழிய
மாயாஸ்வரூப நம்பி மருந்து எண்ணெய்க் காப்பணிய
சேயாய் உதித்த ஆழ்வார்ச் செல்வர்க்கும் சோபனமே!

சாந்து சவ்வாது அணிந்து சகல ஆபரணமும் இட்டு
ஏந்து கொங்கை மடமாதர் இருபுறமும் ஆடிநிற்க
வேந்தனுக்கு நாவளித்த மெய்யன் நம்பிராயருக்கு
சேர்ந்த எண்ணெய்க் காப்பு அணியச் சீமை எங்கும் சோபனமே!

திருக்குறுங்குடி
ஸ்ரீஸ்வாமி அழகிய நம்பி பேரில்
கும்பிப் பாட்டு

ஸ்ரீ பூத்த நல்நகர் திருக்குறுங்கை
தேசங்கள் தேடிவரும் முதன் குறுங்கை
வாழ்த்தியே போற்றுவார் வையகத்தில்
ஸ்ரீ வைகுண்டம் சேரவே நாட்டம் கொள்ளுவார்

அற்புத ஆலயம் அழகு நம்பி
ஆழ்வார் அப்பன் அரிதுணையாம்
ஏற்புத வாத்யம் இசைமுழங்கும்
எப்போதும் சங்கத்வனி விளங்கும்

சொலிக்குது கோபுரம் தங்க ஸ்தூபி
கொடி மரம் இலங்குது மின் ஒளியால்
குடைவரை வாசல் வெகு நேசம்
கோடி சூர்ய பிரகாசமாம்

கோவிலைச் சுத்தியே கும்பிடுவார்
கும்பிட்டுச் சேவையும் செய்திடுவார்
காலையும் மாலையும் வந்து முடிதூடும்
ஸ்ரீ நம்பி அருள் பாடும் சீயர் ஸ்வாமி

முத்துச் சரப்புளி மோகனமாம்
முக்தி அளிக்கும் திருக்குறுங்கை நம்பி
யாவர்க்கும் அருள் கொடுக்கும்
ஸ்ரீ நம்பி நாராயணணாம் வைகுந்தனே!

அஞ்சு பேராகவே வந்தீர்கள்
கொஞ்சி அவதாரம் ஆனீர்கள்
அண்டமும் பிண்டமும் ஒன்றாகவே
ஒருவனாகியே நின்றீர்கள்

தாயார் நாச்சியார் குறுங்கை வல்லி
கனிவாயுடன் தோளும் இடைதுவளும்
மார்புப் பதக்கம் பளபள வென்று
நெஞ்சத் தாமரை தளதளக்கும்

காலில் கொலுசுகள் கங்கணமாம்
கையினில் சங்கு சக்கரமாம்
காதில் ஓலை கம்மல்களும்
கழுத்து அட்டியல் காசு மாலை

முகத்திலே மூக்குத்தி பில்லாக்கு
மூன்றும் பிறை போல் புருவம்
இடையே நெற்றித் திலகம் கஸ்தூரி
இலங்குது நெற்றியில் துலங்குது

பச்சைப் பட்டு பதினாயிரம்
பாவாடை துண்டுகள் – மூவாயிரம்
பவனி வரும் பல்லாக்குகள்
விலைக்கு அடங்காது பத்து லக்ஷம்

திருக்குறுங் கையாம் சிந்து நதி
ஸ்ரீ நம்பி அனுபூதி க்ஷேத்திரமாம்
சின்னங்கள் வாத்தியம் கொலுமேளம்
நகரா சங்குகள் சேகண்டியாம்

திருகுறுங்கை நம்பி தேர் அழகாம்
சிந்து நதி நம்பி தெரு அழகாம்
நாலு தெருவிற்கும் நருவாக இலக்கும்
நம்பி சீயர் ஸ்வாமிகள் வெகு அழகாம்

தேவர் முனிவர்கள் சித்தர்களும்
தேடி மோக்ஷம் கொடுக்கும் நம்பி
பவனி வந்தே மனம் மகிழ்ந்து
காட்சி கொடுக்கும் மலை நம்பியே

கோபுர வாசலிலே ஆனந்தமாம்
கோடி நமஸ்காரம் சேவைகளாம்
அகிலம் எங்கும் புகழ் அண்டமெல்லாம்
ஆகாச சோதியாய் அமர்ந்து நின்றார்.

நாலு ரத வீதியும் தங்கமேடை
நாலாயிர வேத கீதம் பாட
நாட்டியப் பெண்கள் வரிசையாயாட
நாத சின்ன வாத்யம் முழங்கிக் கூட

அஞ்சு கருடன் மேல் அழகன் நம்பி
கொஞ்சிடும் அழகுடன் சாமி நம்பி
பஞ்ச ரத்தின சரப்புளியாம்
பார்க்கப் பார்க்கப் பரஞ்சோதியாய்.

மேல மூக்கு ரத வீதியில்
ஆயர் குலத் திருவீதி தன்னில்
ஆனந்தமாகியே ஆடிவாரார்
அமரர் முனிவர்க்கும் முக்தி மோக்ஷம்

திருக்குறுங்குடி ஸ்ரீஸ்வாமி நம்பி ஸன்னதி
ஊஞ்சல் பாட்டுக்கள்

பொன்மலையும் வெண்மலையும் கால்களாகப்
புகழ் நிறையும் மந்தரகிரி விட்டமாக
நன் மதிகள் வாசுகியே கயிரதாக
நால் வேத சாஸ்திரமே பலகையாக
தினகானும் சந்திரனும் தீபமாக
திக்பாலகர் தெண்டனிட்டு வடம் தொட்டாட்ட
அனகற் பதம் பணியும் நம்பி ஆடிர் ஊஞ்சல்
அருள் நம்பி நாயகியாள் ஆடிர் ஊஞ்சல்

இந்திரனும் நான்முகனும் கவரி வீச
இமையர்கள் அடிபணிந்து வேதம் ஓத
செந்தமிழால் கவி வாணர் கீதம் பாட
திருவருள் சேர் ஆழ்வார்கள் சிந்தை குளிர
அந்தணர்கள் நாலாயிர பிரபந்தம் ஓத
அட்ட திக்குப் பாலர் வந்து அடப்பம் ஏந்த
சுந்தரம் சேர் மாயவனார் ஆடிர் ஊஞ்சல்
ஸ்ரீ குறுங்கை நாயகியார் ஆடிர் ஊஞ்சல்

பங்காரு மேருகிரி கால்களாக
வங்கமலை அதற்கேற்ற விட்டமாக
ஓங்கார வாசுகி கயிரதாக
பூவுலகே செம் பொன்மணி பலகையாக
மங்காத விண்ணுலகம் பந்தலாக
வரிசையுடன் விசுவ கர்மன் கொணர்ந்த
சிங்காரப் பொன்னூஞ்சல் மீதில் ஏறி
சீதையுடன் ஸ்ரீராமன் ஆடிர் ஊஞ்சல்

நீண்ட பொன்மேனி நம்பி ஆடிர் ஊஞ்சல்
நிறைந்து வீற்றிருக்கும் நம்பி ஆடிர் ஊஞ்சல்
பூண்ட ஆபரண நம்பி ஆடிர் ஊஞ்சல்
புவியில் பள்ளி கொண்ட நம்பி ஆடிர் ஊஞ்சல்
ஆண்டவன் திருமலை நம்பி ஆடிர் ஊஞ்சல்
அழகிய பாற்கடல் நம்பி ஆடிர் ஊஞ்சல்
பாண்டவர் சகாய நம்பி ஆடிர் ஊஞ்சல்
பரமபத நாத நம்பி! ஆடிர் ஊஞ்சல்

கொஞ்சும் கிளிமயில் அன்னங்கள் கீதம்பாட
கோபுரத்தின் மேலிருந்து குயில்கள் கூவ
அஞ்சிறைப் புள் ஏறி வந்து முதலை தன்னை
ஆழியதனால் கிழித்து எறிந்து ஆனை காத்தாய்!
வஞ்சகப் பேய் முலையுண்ட மாயனார்க்கு
வட ஆறும் தென் ஆறும் திருமாலையாக
பஞ்சவர்க்கு சாரதியே ஆடிர் ஊஞ்சல்
பாவிக்கும் எம் பெருமான் ஆடிர் ஊஞ்சல்

பண்டு 'ஆல் இலைமேல்' பள்ளி கொண்ட நம்பி
பாடும் பறைச்சிக்கு ஆரம் கொடுத்த நம்பி
அண்டம் எல்லாம் ஓரடியாய் அளந்த நம்பி
அடுத்த பக்கம் நின்றார்க்கு அருள் செய்த நம்பி
கண்டு பாவிக்கும் தெய்வங்கள் மணவாள நம்பி
கைசிகனோடு அரக்கனுக்கும் கதி கொடுத்த நம்பி
ஓண்டமிழ்ச் சடகோபனாகி உயர்வேதம் தமிழ் செய்த நம்பி
உலகம் எல்லாம் உய்யவே நின்று ஆடிர் ஊஞ்சல்.

படங்கள்



திருக்குறுங்குடி கோபுர வாசல்



கைசிக நாடக மேடை



ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், நாச்சியார்கள் சூழ எழுந்தருளி
வடிவழகிய நம்பி நாடகம் பார்க்கும்
திருவோலக்க மண்டபம்





பாரம்பரிய நட்டுவனார்கள்

சங்கரக் கம்பர்

நாராயணக் கம்பர்





பாரம்பரிய பிரம்ம ராட்சதன் நம்பி



பாரம்பரிய நம்பிக்கிழவர் – பாரம்பரிய நம்பாடுவான்

காந்தம்மாள்

குறுங்குடியம்மாள்

பாரம்பரிய ராட்சதனிடமிருந்து
நிகழ்த்துநிலை ராட்சதன் ஆசி பெறுதல்

ராட்சதன் நம்பாடுவானிடம் சரணடைதல்



கைசிக நாடக ஓலைச்சுவடி
மாதிரிகள்

கோவில் நாடக அரங்கப் பிரதி ஒன்றை
ஆவணப்படுத்தல் என்பதற்கப்பால்
பாரம்பரியப் பனுவல் ஒன்றினை
எதிர்காலத்திலும் நிலைநிறுத்தும் பணியாக
இந்நூல் அமையும்.

அனிதா ரத்னம்



வைணவத் திருப்பதிகளில்,
திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில்
தெய்வத் தொண்டுள்ளுள் ஒன்று
கைசிக நாடகம். அவ்வூரிலேயே நடந்த
தொன்மத்தை அடிப்படையாகக்கொண்டு
பெருந்தெய்வக் கோவில் வளாகத்துள்
நடைபெறும் ஒரேயொரு நாடகம் என்ற
தனித்துவம் இதற்கு உண்டு.

சே. இராமானுஜம்

அட்டை வடிவமைப்பு
தில்லை முரளி

அரங்கம் அறக்கட்டளை

காலச்சுவடு பதிப்பகம்

ISBN 978-93-82033-37-0

ரூ. 80